உ

மனமோகினி

ஓர் மாதாந்தச் சஞ்சிகை

(முதல்தர நாவல்கள்)

JAN 1924

தொகுதி 2.] 1923ஷ டிசம்பர்மீ 1உ [பகுதி 11.

"பவளத்தீவு" அல்லது "துடும்பசாபம்" (முடிவு பெற்றது.)

ஞான செல்வாம்பாள் (ஆரம்பம்.)

ஸ்ரீமான்

ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்களால்

இயற்றப்பட்டது

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்

நா. முனிசாமி முதலியாரால்

பிரசுரிக்கப்பட்டது

23

[காபிரைட்.

மனமோகினி

ஓர் மாதாந்த சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந் தரவேண்டியதா யிருத்தலின், அதில் ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதா யிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியதாயிருக்குமென்று இதனை 1922௵ பிப்ரவரி௴ 1௳ முதல் ஆரம்பித்தோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொரு முறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். ஒரு வருஷத்துக்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்கள் பைண்டாகிவிடும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேகம் நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" என்னும் நாவல் முதலில் வெளியாகி முடிந்தது. இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ. 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. 1923௵ மார்ச்சு௴ 1௳ முதல் இதே நூலாசிரியரால் வரையப்பட்ட "பவழத்தீவு" அல்லது "குடும்ப சாபம்" என்ற மிக்க அதிசயமான நாவல் தொடங்கி, வெளியாகிவருகிறது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வெளியாகியுள்ள சஞ்சிகைகளை வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. அவருடைய நாவலின் [illegible]க்கு எல்லோருக்குந் தெரிந்திருக்குமாகையால் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

மானேஜர்: "ஆனந்த நிலையம்"

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதராஸ்

26 JUN

இருவரும் காப்டன் உத்தண்டி முன்னாள் முகமூடி விருந்திற்குச்சென்றபோது அணிந்துகொண் டிருந்த மாந்திரீகவேட உடைகளை வாடகைக்கு வாங்கிய கடைக்குச் சென்றார்கள். காப்டன் அப்பாசாமியிட மிருந்த மூட்டையை வாங்கிக் கடைக்காரனிடம் கொடுத்துவிட்டு அதற்கு [illegible]டாக வைத்திருந்த பணத்தில் வாடகை போக மிச்சத்தை வாங்கிக்கொண்டான்.

கடைக்காரன் காப்டனை நோக்கி "இந்த உடைகள் தங்களுக்குப் பொருத்தமாக விருந்திருக்குமென்று நம்புகிறேன். மாந்திரீகன் வேடம் தங்களுக்கு மிக்க நேர்த்தியாகவே இருந்திருக்கும்" என்றான். அப்போது வேலையாளின் முன் அதைப்பற்றிக் கூறவேண்டாமென்று காப்டன் பன்முறை சமிக்கை செய்வதைக் கடைக்காரன் மனைவிகண்டு [illegible] கணவனை யதட்டிப் பேசாமலிருக்கும்படி செய்தாள். [illegible]பிறகு காப்டன் உத்தண்டி தன் புது வேலையாளுக்கு [illegible]களும், சில ஆபரணங்களும் வாங்கிக்கொண்டு அ[illegible]யோடு ஹோட்டலுக்குத் திரும்பினான்.

ஹோ[illegible]லுக்கு வந்ததும் காப்டன் அப்பாசாமியை நோக்கி "நீ அறைக்குச்சென்று உன் உடைகளைக் களைந்துவிட்டுப் புதுஉடைகளை யணிந்துகொள்" என்று கூற, அவன் அவ்வாறே தன் அறைக்குச்சென்றான். அச்சமயம் கர்னல் குமரவேல் காப்டனைக்காண்பதற்காக அவன் அறைக்கு வந்தான். காப்டன் களைப்பான முகத்தோ டிருப்பதைக் கர்னல் கண்டும் காணாதவன் போல் அவனருகு வந்தனமளித்து "ஆ காப்டன், இன்று நானே தங்களைக்காணலாமென்று வந்தேன். முன்னமே வந்திருப்பேன். அவசரமாகச் செய்யவேண்டிய வேலைகள் சில இருந்தன" என்றான். காப்டன் நகைத்துக்கொண்டே "ஆ! அவற்றில் அந்தக்கர்னல்

சென்னை-600

இரகுநாதன் புத்திரியைத் தூக்கிக்கொண்டு வரும் ஆலோசனையும் ஒன்று என்று நம்புகிறேன்'' என்றான்.

காப்டன் சிரித்துக்கொண்டே பேசியபோது கர்னல் மிக்க சந்தோஷமடைந்து "ஆ காப்டன். நீர் குறிசொன்னது உண்மையே. அந்த விஷயத்தைப்பற்றிய ஏற்பாடுகளும் செய்தேயிருக்கிறேன்'' என்றான்.

காப்டன்:—தாங்கள் எக்காரியத்தையும் துரிதமாகவே செய்கிறீர்கள்.

கர்னல்—ஆம். இப்படிப்பட்ட வேலைகளில் ஆலசியம் செய்யாமல் உடனுக்குடனே முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டும்.

காப்டன் கடகடப்பை விட்டு நன்றாய் நகைத்துக்கொண்டே "கர்னல் இந்த இரகசியத்தை என்னிடம் நம்பிக்கையாகக்கூறியிருக்கிறீர். இத்தகைய இரண்டெ[illegible] அமிசங்களில் நாம் இருவரும் அபிப்பிராயங்களில் ஒ[illegible] களாகவிருக்கிறோம். இந்த ஏற்பாட்டைப்பற்[illegible] களை யென்னிடம் கூற உத்தேசித்திருக்கிறீர் [illegible] நம்புகிறேன். மேலும் இத்தகைய விஷயத்தைப்ப[illegible] சூக்கும உளவுகளையறிந்துகொண்டிருந்தால் சமயத்தில் இத்தகைய விவகாரம் ஏதேனும் எனக்கு நேரிடும் போது மிக்க உபகாரமாகவிருக்கும்.'' என்றான்.

கர்னல் பின்னும் சந்தோஷமடைந்து "நண்பரே! என் இரகசியங்கள் எதையும் உம்மிடம் மறைக்க எனக்கு விருப்பமேயில்லை. உண்மையாகக் கூறுகிறேன், உம்மோடு சிநேகமாகவிருக்க எனக்கு மிக்க விருப்பமுண்டு'' என்றான். காப்டன் "ஆ! இப்போது நான் கூறுகிறேன். என் ம[illegible] தில் அவ்வித ஆவலேயிருக்கிறது. ஆனால் நான் ஒரு வி[illegible] யத்திற்காக அச்சங்கொண்டிருந்தேன். அதாவது ந[illegible]

கண்டிதமாகத் தங்களிடம் நடந்துகொண்டதற்காகத் தாம் என்மேல் கோபம்கொண் டிருப்பீரென் றெண்ணி யிருந் தேன்.'' என்றான்.

கர்னல்:—"ஒரு போதுமில்லை. பண விஷயத்தில் எனக்குக் கொஞ்சம் மனக்கலக்கம் நேர்ந்தது. அதனால் அச்சமயம் தங்களுக்கு அவ்வாறு புலப்பட்டிருக்கும். மற்றபடி தங்கள் மேல் எனக்கு எள்ளளவும்..." என்பதற்குள்,

காப்டன்:—போதும் போதும்; இனி யதைப்பற்றி ஒன்றும் கூறவேண்டாம். நண்பர்கள் என்ற பின் அத்தகைய சம்பாஷணையே கூடாது. ஆ அந்தப் பெண் விஷயம் ஏதோ விவரம் கூற விருந்தீரே..." என்றான்.

கர்னல்:—"அதற்காக நம்பிக்கையான இரண்டு ஆசாமிகளை யேற்பாடு செய்கிறேன். நாளை இரவு அவர்கள் கட்டாயம் அப்பெண்ணைக் கொண்டுவந்து விடுவார்கள். 'இரவு ஒன்பது மணிக்கு அவசியம் ஆற்றுப் பாலத்தின்மேல் வந்து என்னைச் சந்திக்கக் கோருகிறேன். ஒரு முக்கியமான சமாசாரம் உன்னிடம் கூறவேண்டி யிருக்கிறது' என்று காப்டன் உலக நாயகன் எழுதியதுபோல ஒரு கடிதம் எழுதி அப்பெண்ணுக்கு அனுப்பினால் அவசியம் அவர்கள் மாளிகைக் கருகில் வெள்ளை யாற்றின்மே லிருக்கும் பாலத்திற்கு அவள் வருவாள். என் ஆட்கள் வாயு வேகமாகச் செல்லத் தக்க குதிரைகள் வைத்துக்கொண்டு ஆயத்தமாக அங்கு இருப்பார்களாதலால், உடனே அப்பெண்ணைத் தூக்கிக்கொண்டு துரிதமாக இலவணபுரிக்கு வந்து விடுவார்கள். நான் கொஞ்சம் வேலையாக இரண்டொரு நாள் இங்குதானிருப்பேன்" என்றான்.

186496.

காப்டன்:—"பேஷ் பேஷ். மிக்க நேர்த்தியான ஏற்பாடு. நீர் அவசியம் பூரண ஜெயமடைய வேண்டுமென்று கோருகிறேன். இத்தகைய விஷயங்களில் மிக்க சாமார்த்திய தந்திரங்கள் வேண்டும். தங்களுடைய இத்தகைய படிப்பினைகளில் கொஞ்சம் அறிந்திருப்பது எனக்குச் சமையத்தில் நல்ல உதவி யளிக்கும். எனக்கு இந்த நகர அனுபவம் சுத்தமாய்த் தெரியவில்லை" என்றான்.

கர்னல்:—"அப்படியிருந்தும் இரவு மாந்திரீக வேடந் தரித்து மிக்க சாமார்த்தியமாக நடித்திரே!" என்றான்.

காப்டன் மிக்க வியப்படைந்து:—"என்ன! யார் மாந்திரீகன் வேடம் தரித்திருந்தது? நானா?" என்றான்.

கர்னல்:—ஆம். சந்தேகமென்ன! உயரம் பருமன் சாயல் யாவற்றையும் கவனித்தபோது இது நமது நண்பராகிய காப்டன் உத்தண்டியே யென்று தெரிந்து கொள்ளக்கூடவா எனக்குச் சக்தியில்லை?" என்றான்.

காப்டன்.—"நண்பரே! மாந்திரீகனுடைய சாமார்த்தியத்தைப்பற்றி நீர் கூறியயாவும் உண்மையே. நானும் யாவும் பார்த்து உங்களைப் போலவே மிக்க வியப்படைந்தேன். ஆனால் மாந்திரீகன் வேடந்தரித்திருந்தது நானல்ல. அக்கூட்டத்தில் மலையாள நாயர் சேனாதிபதி போல் ஒருவன் வேடந்தரித்து வந்திருந்தானே பார்த்தீரா?" என்றான்.

கர்னல்:—ஆம் பார்த்தேன். அவன் உம்மளவு உயரமேயிருந்தான். மாந்திரீகனும் தங்கள் உயரமே யிருந்தான்.

காப்டன்,—"ஆயினும் மாந்திரீக வேடந் தரித்திருந்தது

நானல்ல. நாயர் சேனாதிபதி வேடந்தரித்திருந்தவனே நான். ஆ! மன்னிக்கவேண்டும். எனக்குக் கொஞ்சம் வேலை யிருக்கிறது" என்றான்.

கர்னல்:—ஒன்றும் கூறவேண்டாம். தங்களுக்கு விருப்ப மானால் மாலை சூதாடும் அறையில் நாம் சந்திக்கலாம். தாங்கள் என்னிடம் ஜெயித்துக்கொண்டதற்கு ஈடாக எனக்கொரு முறை சந்தர்ப்பம் அளிக்கலாகும்" என்றான். காப்டன் "ஆகா; அப்படியே யாகட்டும். தடையேயில்லை" என்றபின் கர்னல் விடை பெற்றுக்கொண்டு சென்றான்.

கர்னல் செல்லும்போது தாழ்வாரத்தின் கோடியில் தன் அறையிலிருந்து வெளியில் வரும் அப்பாசாமியைக் கண்டு "இரவு முகமூடி விருந்தில் மாந்திரீகன் வேடமணிந்திருந்தவன் காப்டன் உத்தண்டிதானா என்பதை மெதுவாயறிந்துகொள்" என்றான். அப்பாசாமி "அதை யினி யறியவேண்டிய அவசியமேயில்லை. இந்தக் காப்டனே அவ்வேடமணிந்திருந்தானென்று இப்போதே நிச்சயமாகக் கூறுகிறேன். இனி நான் இங்கு ஆலசியமாகத் தங்கலாகாது. காப்டன் இருக்கும் அறைக்குச் செல்லவேண்டும்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

கர்னல் தன் அறைக்குச் செல்லும்போது "இந்தக் காப்டன் தன் இரகசியத்தை நம்மிடம் கூறமாட்டான். ஆயினும் அப்பாசாமி மூலமாக நாம் இவன் விஷயங்களனைத்தும் அறிந்துகொள்ளலாம். அவன் மூலமாய் அறியும் இவன் சங்கதிகளால் இவன் நமக்கு வசமாகும்படி நம்மாலான வரையில் பார்ப்போம். அப்படி யனுகூலப்பட்டால் நாமே நமது காரியத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம். எதற்கும் இன்னும் இரண்டு மூன்று நாட்கள் வரை அரிய

னாதம் பிரபுவிடம் ஒன்றும் கூறலாகாது. இவன் மூலமாய் நமக்கு அனுகூலமாகாதென்று தெரிந்தால் இவனைப்பற்றிப் பிரபுவுக்குக் கூறிவிடுவோம்'' என்று சிந்தித்துக்கொண்டே சென்றான்.

இதற்கிடையில் அப்பாசாமி தன் எஜமானிடம் சென்ற போது அவன் வாலிபனை நோக்கி,

"நீ இலவணபுரியின் எல்லாப் பாகங்களையும் நன்கறிவாயா!'' என்றான்.

அப்பாசாமி:—ஆ! என்னைவிட இந்நகரை நன்றாயறிந்தவன் வேறு யாருமில்லை என்று கூறுவேன்'' என்றான்.

காப்டன் "ஏதோ பார்ப்போம். இந்நகரில் இரத்தசாலையென்கிற இடம் எங்கேயிருக்கிறது உனக்குத் தெரியுமா?'' என்றான்.

அப்பாசாமி "ஆகா தெரியும்'' என்றான். அதன்மேல் காப்டன் அவனை யழைத்துக்கொண்டு புறப்பட்டான். வாலிபன் சமீபமாக உள்ள வழியாக அவனை யழைத்துக் கொண்டு இரத்த சாலைக்குச் செல்லுகையில், காப்டன் அவனை நோக்கி "அந்த விடத்திற்கு இப்பயங்கரமான பெயர் என் இடப்பட்டது?'' என்றான்.

வாலிபன்:—நெடு நாட்களுக்கு முன் அந்த இடம் ஒரு அழகான மாளிகையாக விருந்தது. அதன் சொந்தக்காரர் ஒரு யௌவனமான பிரபு. அவர் மனைவி மிக்க அழகான மங்கை. ஒருநாள் இரவு அவர்கள் வீட்டில் ஒரு பெரிய விருந்து நடந்துகொண் டிருந்தபோது இரவு சுமார் பத்து மணிக்கு அச்சீமாட்டி திடீலென்று காணமற் போய்விட்டாள். இரவு முழுதும் தேடியும் அவள் அகப்படவில்லை. மறுநாள் காலையில் மாளிகையைச் சேர்ந்த தோட்டத்தில் அம்மாது துண்டு

துண்டாய் வெட்டிக் கொல்லப்பட்டிருந்தாள். அப்பிரபு அன்றே யெங்கோ போய் விட்டவர் மறுபடி திரும்பி வரவேயில்லை. அவள் கொல்லப்பட்டிருந்த விடத்தில் கட்டப்பட்டிருக்கும் கட்டிடங்களுக்குத் தான் இரத்த சாலையென்று பெயரிடப்பட்டிருக்கிறது" என்றான்.

இதற்குள் இருவரும் அந்த விடத்திற் கருகில் வந்து விட்டதால் காப்டன் அப்பாசாமியை நோக்கி, "இனி நீ என் கூட வரவேண்டிய அவசியமில்லை. நீ ஹோட்டலுக்குச் செல்" என்றான். அப்பாசாமி அவ்வாறே திரும்பி விட்டான்.

இரத்தசாலையிலுள்ள ஒரு வீட்டின் மேல்மாடியில் மிக்க இழிவாகத் தோன்றும் ஒரு அறையில் ஒரு ஸ்திரீ வசித்துக்கொண்டிருந்தாள். அவள் துக்ககரமான ஆழ்ந்த சிந்தனையோடு உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு வயது உண்மையில் முப்பதே யாயினும், மன வேதனையால் பார்வைக்கு நாற்பது வயது சென்றவள்போல் காணப்பட்டாள். அவள் இப்போது முகம் வாடி விகார ரூபமடைந்து காணப்படினும், சமீபகாலத்தில் மிக்க சௌந்தரிய வதியாய் நல்ல அந்தஸ்தில் இருந்தவள் போலவே காணப்பட்டாள். இப்போது அம்மாது பழைய கிழிந்த உடையை யணிந்துகொண்டிருந்தாள். அந்த அறையில் ஒரு அலங்காரமுமில்லை. சாமான்களிலும் விலையுள்ளது ஒன்றுமில்லை. அவள் மிக்க கஷ்டமான நிலைமையி லிருக்கிறாளென்பது நன்கு விளங்கியது. ஸ்திரீகள் செய்யத்தக்க தையல் வேலை முதலியவை ஏதேனும் வேலை செய்கிறாளென்றாலோ அத்தகைய குறி அங்கொன்றுமில்லை. அவள் அத்தகைய நிலைமையிலிருந்தாலும், அழுக்கடைந்து கிழிந்த உடை யணிந்

திருந்தாலும் அவள் முகம் அவள் நாகரீகமான அந்தஸ் துள்ள நிலைமையில் இருந்தவள் என்று காட்டியது.

அவள் அறையின் கதவு திறக்கப்பட்டதும் தடித்த உருவமுடையவளும் முரட்டுத்தனமான அநாகரீகமாய் உடை தரித்திருந்தவளுமான ஒரு மூதாட்டி உள்ளே வந்து சற்றேனும் மரியாதையாவது இரக்கமாவது இல்லாத மாதிரியாக அம்மாதை நோக்கி "அம்மா ஜகதாம்பாள்! யாரோ ஒரு மனிதன் குதிரைப்படை உத்தியோகஸ்தன் போல் காண்கிறான். உன்னைக்கண்டு பேசவேண்டுமென்று வந்திருக்கிறான்" என்றாள்.

இதைக்கேட்டதே அம்மாது கலவரமடைந்து "யார்! யார் அது?" என்றாள். கிழவி "அம்மனிதர் தம் பெயரைக் கூறவில்லை. ஆனால் அவர் நாணயமானவராகவும் அரசருடைய சபையில் இருப்பவர் போலும் காண்கிறது" என்றாள்.

இதைக் கேட்டதே யம்மாது பின்னும் மனத்திடிப் படைந்து "ஆ! அவராகவே யிருக்கவேண்டும். நாம் எழுதிய கடிதத்தைக் கண்டு மனமிளகி வந்திருக்கவேண்டும்" என்று தனக்குத்தானே மெதுவாகக் கூறிக்கொண்டு மூதாட்டியை நோக்கி "பெயரைக் கூறாவிட்டா லிருக்கட்டும்; அவருக்கு வயது ஏறக்குறைய என்ன இருக்கும்? அதைக்கூறு" என்றாள். மூதாட்டி "அவர் வயது நாற்பதிற்குமே லிராது" என்றாள்.

இதைக்கேட்ட ஜகதாம்பாள் என்ற அம்மாது "ஆ! அப்படியானால்...கடவுளே...அவரேதான்" என்று கூறி மூதாட்டியை நோக்கி "அவரை யுள்ளே யனுப்பு" என்றாள்.

மூதாட்டி படிகளின் வழியாகக் கீழ் இறங்கிச் சென்றதும்

ஜகதாம்பாள் தன் இருகரங்களையும் தன் நெற்றியில் வைத்தழுத்திக்கொண்டு மிக்க மனத்துடிப்போடு, "ஓ மனமே! சற்று பொறுமையாக விரு, உளமே! பதைக்காதே. எத்தகைய தூஷணையையும், கோபத்தையும், பொறுமையோடேற்றுக்கொள்ள ஆயத்தமாக விரு. ஏனெனில் அவர் வந்து விட்டார். நான் என் குற்றத்திற்காக மனஸ்தாபப் படுகிறேனென்றும், நான் அனுபவிக்கும் தண்டனையையும் கூறி என்னை மன்னிக்கும்படி எழுதிய கடிதத்திற்கு விடையாக என் கணவரே அகன்ற கடலைக் கடந்துவந்து விட்டார்" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டாள்.

படிகளில் ஆளேறி வரும் சத்தத்தைக் கேட்டபோது அவள் மனத்துடிப்பு இத்தகையதென்று கூறமுடியாது. கடைசியில் அறையின் கதவு திறக்கப்பட்டதும் உள்ளே வந்த ஆளைக்கண்டதே துள்ளி எழுந்து "ஆ! ஜனரல் உக்கிரசேனர்!" என்றாள். இதுகாறும் காப்டன் உத்தண்டி என்று கூறப்பட்டு வந்த மனிதனுடைய உண்மை அந்தஸ்தும் பெயரும் ஜனரல் உக்கிரசேனன் என்று இப்பொழுது அறிந்துகொண்டோம்.

ஜனரல் உக்கிரசேனர்:—"ஆம் ஜகதாம்பாள்! நானே. உன் கணவரும் என் அருமை நண்பருமான கர்னல் மார்த்தாண்டன் கோரிக்கைப்படி நான் இங்கு வந்திருக்கிறேன்" என்று கூறிவிட்டு அவள் தேகம் அடைந்துள்ள மாறுதலையும் அவள் இருக்கும் கோரமான நிலைமையையும் உற்று நோக்கித் துயரமுற்றார்.

ஜகதாம்பாள், "நீர் என் கணவர் கூறிய சமாசாரத்தை யியம்ப வந்தீரென்று தெரிகிறது. அவர் என்னை மன்னித்தாரா? தயவுசெய்து கூறும்" என்றாள். ஜனரல் உக்ரசேனன், "உன் கணவனாகிய என் உயிர்த்தோழர் தமது

மரணத்தருவாயில் உன்னை மனதார மன்னித்துவிட்டார்" என்றான். இதைக்கேட்ட ஜகதாம்பாள் மிக்க மனவருத்த மடைந்து தேம்பியழுதாள். அவள் துக்கம் தணியும் வரை ஜனரல் சற்றுநேரம் ஒன்றும் பேசாமல் அவளை யுற்று நோக்கிக்கொண்டிருந்தார். தன் துயரம் சற்று அடங்கிய பின் அம்மாது ஜனரலை நோக்கி, "என் கணவர் எப்படி யிறந்துபோனார். என்ன கூறினார். தயவுசெய்து யாவும் விவரமாகக் கூறவேண்டுகிறேன்" என்றாள்.

ஜனரல் உக்கிரசேனர் :—அம்மா ! நான் கூறுவதைச் சாவதானமாகக் கேள். சரியாக ஐந்து வருடங்களுக்கு முன் ஒரு நாள் உன் கணவன் கர்னல் மார்த்தாண்டர் உன்னிடம் விடை பெற்றுக்கொண்டு என்னோடுகூட யுத்த முனைக்குப் புறப்பட்டது நினைப்பிருக்கிறதல்லவா? அப்போது நாங்கள் சின்னக்கட்சியைச் சேர்ந்த அரசனுடைய கொடுங்கோல் ஆட்சியைச் சகிக்க முடியாமல் அதினின்றும் விடுவித்துக்கொள்ள ஆயத்தமாகவிருந்த மாகாண வாசிகளுக்குத் தலைவர்களாக விருக்கச் சென்றோம்.

ஜகதாம்பாள் :—"ஆம், ஆம்; அது நன்றாய் நினைவிருக்கிறது. சற்று நான் கூறுவதைக் கேளும். நான் இதுகாறும் என் கணவனுக்குக் கனவிலும் துரோகம் நினைத்ததில்லை. தாங்கள் எங்களுடைய மனமொத்த நேசராக அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வந்து கொண்டிருந்ததால் நான் கூறுவது உண்மையென்றும் அல்லவென்றும் அறியலாகும். இக்கொடிய சண்டாளன்—அவன் பெயரைக் கூறவும் எனக்கு மனம் ஒப்பவில்லை. ஆயினும் கூறியே தீரவேண்டும். இந்த அரியநாதம் பிரபு அப்போது எங்கள் வீட்டிற்கு மிக்க

இரகசியமாக வந்துகொண் டிருந்தானல்லவா? அவன் கள்ளனைப்போல் பயந்துகொண்டு மிக்க இரகசியமாக இராக்காலங்களில் இருளில் ஒருவருமறியாமல் வந்து கொண்டிருந்தான். நீங்கள் சென்றபின்பும் அவன் அவ்வாறே அடிக்கடி இரகசியமாக வந்துகொண்டிருந் தானென்பதும் உமக்குத் தெரியும்..." என்றாள்.

ஜனரல்:—"ஆம், ஆம்; யுத்தத்தைப்பற்றிய விஷயத்தில் எங்களுக்கு அவன் தெரிவிக்கவேண்டிய ஏற்பாடுகளை யுன்மூலமாகத் தெரிவிக்க வேண்டுமென்றும், நாங்கள் அவனுக்கறிவிக்கும் சங்கதிகளும் உன் மூலமாகவே அவனுக்கறிவிக்கப்பட வேண்டுமென்றும ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதனாற்றான் அவன் அவ் வாறு உங்கள் வீட்டிற்கு இரகசியமாக வந்துகொண் டிருக்க நேரிட்டது. அம்மா! நீ யவனோடு கூட இங்கு வந்துவிட்ட சங்கதியைக் கேள்விப்பட்டதே உன் கண வன் உங்கள் இருவர்மேலும் கோபங்கொண்டு சபித்த தோடு, உன்னைத் தனியாக அத்தகைய அயோக்கியன் வசத்தில் உதவியின்றி விட்டுவந்த மூடத்தனத்திற்கா கத் தன்னைத்தானே அதிகமாக நிந்தித்துக் கொண் டார். ஆனால் அப்போது அவன் நடித்தமாதிரியில் அவன் இத்தகைய பெருஞ்சதி செய்வானென்று நினைப்பதற்கில்லை" என்றான்.

ஜகதாம்பாள்:—"ஆ! நடந்த சங்கதிகளைச் சிந்தித்தால் என் மனம் தீப்பற்றி எரிகிறது. அத்தகைய சண்டா ளன்மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ளாது விடுவதை விட பிராணத்தியாகம் செய்துகொள்வது உசிதம் என்று தோன்றுகிறது. ஆ! அவன் செய்த சூது வாதுகளையும் சதியையும் தாங்கள் கேட்டால்-அய்யோ

கடவுளே! என் கணவன் என்னைத் துரோகம் செய்து விட்டாரென்றும், யுத்தம் நடக்கும் இடத்தில் உள்ள ஒரு சிற்றரசன் புத்திரியை ரகசியமாய் மணம் செய்துகொண்டாரென்றும்..." என்பதற்குள்,

ஜனரல் கோபத்தோடு "அக்கள்ளப்பயல் கூறியது அடியோடு பொய். உன் கணவர் ஏக பத்தினி விரதர். அவர் உனக்கு எப்போதும் துரோகம் செய்ய எண்ணியதேயில்லை என்று நான் சத்தியம் செய்வேன்" என்றான்.

ஜகதாம்பாள் :—அந்தோ! என் கணவர் எதிரிலில்லாத போது அம்மொழிகளை நான் நம்பியிருக்கலாகாது. ஆனால் நான் அத்துஷ்டனுடைய மாயஜாலத்தில் கட்டுண்டுவிட்டதால் அவன் வார்த்தைகளையெல்லாம் உண்மையென்றே நம்பிக்கொண்டேன். என் கணவர் எனக்குத் துரோகம்செய்தார் என்று நான் நம்பிக்கொண்டதோடு அவன் எனக்குத் தேறுதல் கூறும் நண்பனாக விருக்கிறானென்றும் நம்பிக்கொண்டேன். கணவன் அன்பை யிழந்து அங்கு தனியாக இருப்பதை விட நமது ஜன்ம பூமிக்குச் சென்று அங்கு சுகமாகவும் கேளிக்கையாகவுமிருப்பது நலமென்று எனக்குத் தோற்றியது. உலக அனுபவம் நன்றாக வறியாத வாலிப வயதில் அத்தகைய தந்திரக்காரன் மாயவலையில் சிக்குவது எவ்வளவு சுலபம். அங்கு சென்றதே சுலபமாகக் கலியாண பந்தத்தை யுடைத்துக்கொண்டு தன்னை மணம்புரிந்து கொள்ளலாமென்று பலவிதமான ஆசை வார்த்தைகளைக் கூறி மயக்கி விட்டானாகலால் நான் அவன் கூடவே இங்கு வந்துவிட ஒப்பிக்கொண்டேன். ஆ! அவன் செய்த படுமோசத்தை நினைக்க, நினைக்க..." என்றபோது.

ஜனரல் உக்கிரசேனர்:—சற்று பொறு. நான் கூறும் சில விஷயங்களைக் கவனமாகக் கேள். அரியநாதம் பிரபு என்ற துஷ்டனுடைய அயோக்கியத்தனமும், துரோகமும், மோசமும் எத்தன்மையனவென்று நீ பூரணமாக அறியமாட்டாய்.

ஐந்து வருடங்களுக்கு முன் அரசன் மேற்கு நாட்டின் வடகிழக்குப் பாகத்திலுள்ள மாகாணம் முழுமையும் இந்த அரியநாதம் பிரபுவுக்கு முப்பது வருட அனுபோகத்திற்குச் சர்வ மானியமாக விட்டுவிட்டார். அச்சமயம் தான் அந் நாட்டு வாசிகள் சின்னக்கட்சி யரசனது அக்கிரம ஆளுகையி லிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள முயன்றுகொண் டிருக்கிறார்கள். அதே சமயத்தில் அங்கு வந்த அரியநாதம் பிரபு தனக்கு அரசன் அளித்த பூமியின் நிலைமையை யுணர்ந்து கலக்கம் அடைந்தான். அப்பூமி இவனுக் களிக்கப் பட்டதை யறிந்ததே ஜனங்கள் பின்னும் பீதியடைந்து இந் தச் சாதாரண மனிதனிடம் குடிகள்போல் நாம் அடங்கி யிருக்கத் தகாதென்று தீர்மானித்தார்கள். அரியநாதம் பிரபுவிற்குப் பெருந்திகிலுண்டாய்விட்டது. உன் கணவ னுக்கும் எனக்கும் ஜனங்களிடமுள்ள செல்வாக்கை யிவன் அறிவான். ஆகையால் இவன் இரகசியமாக உங்கள் வீட் டிற்குவந்து எங்களிருவரோடும் ஒரு ஏற்பாடு செய்துகொண் டான். இவன் அரசனுல் அனுப்பப்பட்டவனாக இருப்பதால் பகிரங்கமாக எங்களோடு கலக்கலாகாது. அதனால் தான் இரகசியமாக எங்கள் கட்சியிலிருந்து எங்களுக்கு வேண் டிய பொருளுதவி செய்வதாகவும், நாங்கள் இருவரும் கல கக்கட்சியின் படைத்தலைவர்களாக இருந்து அரசன் சேனை யைத் தோற்கடித்து விட்டதும் அந்த நாட்டை யொரு குடியரசு நாடாக்கிக்கொள்வதென்றும், தானே அதன்

ஆளுகைக்கு முதல் பிரதான அதிகாரியாகிய அக்கிராசனாதி பதியாயிருப்பதென்றும் ஏற்பாடு செய்தான். சேனைக்கு வேண்டிய உடை, ஆயுதங்கள் முதலிய முஸ்தீபுகளுக் கெல்லாம் இவனே தாராளமாகப் பண உதவி செய்தான். இவன் இரகசியமாக இவ்வளவு தூரம் நம்மோடு சம்பந்தப் பட்டிருப்பதால் இவன் உண்மையாகவே இவை யாவும் செய்கிறான் என்று நாங்கள் நம்பினோம். இதைப்போலவே இவன் எந்த விஷயத்திலும் துரோகம் செய்யானென்றே நம்பியதால் உனக்கு இத்தகைய சதி செய்வானென்று நினைப்பதற்கில்லை'' என்பதற்குள்,

ஜகதாம்பாள்.—"அந்தோ! உங்கள் விவகாரத்தில் கூடவா துரோகம் செய்தான். அவ்வளவு பொருள் உதவி செய்தானே!" என்றாள்.

ஜனரல்.—"ஜகதாம்பா! அச்சண்டாளன் ஆதி முதல் துரோக சிந்தனையே கொண்டிருந்தான். அவன் முத லில் எங்களிடம்வரும்போதே சுயநலங்கருதித் துரோக சிந்தையோடும் நயவஞ்சக எண்ணத்தோடுமே வந் தான். இங்கு வந்து ஜனங்கள் கலகத்திற்குக் கிளம்பி யிருப்பதைக் கண்டதே "கைக்கெட்டியது வாய்க் கெட்டவில்லை'' என்ற பழமொழிபோல், அரசன் தனக்கு மானியமாக அளித்த பூமியடியோடு தனக் குக் கிடைக்காமற் போய்விடும் என்றுணர்ந்து பெருந் திகிலடைந்தான். பிறகு எங்களிருவருடைய செய் கையு மறிந்துகொண்டு, "நாம் இரகசியமாக இவர்க ளோடு சேர்ந்துகொண்டு இவர்கள் தலைமை ஸ்தானத் தில் இருந்துகொண்டு பண உதவிசெய்து சண்டை யிடும்படி ஏற்பாடு செய்வோம். இவர்கள் ஜெயமடைவ தாயின் நாம் பகிரங்கமாகவே இவர்களின் தலைவ

னென்று வெளிவந்து குடியரசுக்கு முதல் அக்கிராச ஞதிபதியாய் விடுவோம். பிறகு அதிகாரம் நமது கரத்தில் வந்துவிட்டதே நமது வார்த்தையே சட்ட மாகும்படிசெய்து சீக்கிரத்தில் குடியரசையொழித்து விட்டு ஏகச்சக்ராதிபதியாய் முடி சூட்டிக்கொண்டு இந்த நாட்டில் ஒரு அரச பரம்பரையைத்தாபித்து விடுவோம். அப்படி இவர்கள் ஜெயமடையாது அர சன் சேனை ஜெயமடைவதாகத் தோன்றிஞல் உடனே அரசன் சைனியத்தோடு கூடிக்கொண்டு அவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்து உற்சாக முண்டாக்கிக் கலகக்காரரைக் காட்டிக்கொடுத்து அவர்களை யடியோ டழித்துவிடுவோம்" என்ற இவ்விதத் தீர்மானம் செய்துகொண்டே இவன் எங்களிடம் வந்தான். மேற் கண்ட யாவும் உண்மை யென்பதற்குப் பூரணமான அத்தாக்ஷிகள் கிடைத்திருக்கின்றன. அதில் எள்ளள வும் அய்யமில்லை. அதேப்படி கடைசியாக நடந்த யுத்தத்தில் சில சிற்றரசர்கள் நம்பகம் கூறியிருந்து மோசம்செய்து விட்டதால் நாங்கள் தோல்வியடைய நேர்ந்தது. அப்போது இத்துரோகி சோர்வடைந்து திரும்பிப் போய்விட ஆயத்தமாக விருந்த அரசன் சேனைக்கு ஏராளமான பொருளுதவி செய்து அவர் களுக்கு உற்சாகமும் சக்தியு முண்டாக்கி, நாங்கள் அடியோடு தோல்வி யடையும்படி செய்துவிட்டு, உன்னை யிட்டுக்கொண்டு இங்கு வந்துவிட்டான். இப் போது இவனுடைய துரோகத்தையும் வஞ்சனையை யும் என்னவென்று நினைக்கிருய். இத்தகைய சண் டாளனுக்கு என்ன தண்டனைதான் போதுமான தெனலாம்?" என்ருர்.

இம்மொழிகளைக் கேட்ட ஜகதாம்பாள் கண்களில்

கோபத்தனல் வீச ஜனரலை நோக்கி, "ஆ! சகோதரருக் கொப்பானவரே! தாங்கள் இப்போது வந்திருப்பது இத் துஷ்டனைத் தண்டிக்கத்தானே? ஆகா! இதுகாறுமே அச் சண்டாளன்மேல் வஞ்சந் தீர்த்துக்கொள்ள எனக்குப் போதுமான காரணங்க ளிருந்தன வெனின், இப்போதோ எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன. அச்சண்டாளன் என்னை நம்பவைத்து அடியோடு வஞ்சித்து மோசம்செய்து விட்டான். என்னை யன்போடு ஆதரிக்கக் கடமைப்பட்ட அவன் சாதாரணமான ஒரு பிச்சைக்காரியை நடத்துவது போல் தன் மாளிகையிலிருந்து என்னை நிராதரவாகத் துரத்திவிட்டான். இதோ என்னிலைமை யெவ்வாறிருக்கிற தென்று பாரும். இதற்கெல்லாம் அவன்மேல் எத்தகைய வஞ்சந் தீர்த்துக்கொண்டால் போதுமானதாகும்? இப் போது தாங்கள் இங்கு வந்திருப்பது என்ன காரணமாக? அவன்மேல் கொடிய வஞ்சம் தீர்த்துக்கொள்ளத்தானே? கூறும் கூறும்!" என்று ஆவலோடு வினவினள்.

ஜனரல் உக்கிரசேனர்.—அம்மா! நான் இப்போது இங்கு வந்திருப்பது பல வேலைகளுக்காக. முதலாவது, என் நண்பர் கர்னல் மார்த்தாண்டர் தமது மரணத் தறு வாயில் வெளியிட்ட கோரிக்கையை நிறைவேற்று வதற்காக. இரண்டாவது, இச்சண்டாளன் எனக்குச் செய்த துரோகத்திற்கும், என் நண்பருக்குச் செய்த துரோகம், அவர் மனைவியாகிய உனக்குச் செய்த தீங்கிற்கும், இவன் தக்க தண்டனை யடையும்படி செய்வதற்கும், மூன்றாவது, ஜனரல் உக்கிரசேனன் என்ற பெயரை மறைத்துவிட்டு ஒரு மாறு பெயர் வைத்துக்கொண்டு இத்தேசத்தில் கீர்த்தியும் பொரு ளும் சம்பாதிக்கவுமே இங்கு வந்தேன்" என்றார்.

ஜகதாம்பாள்.—"தாங்கள் மேற்கு நாட்டில் ஜனரல் உக்கிர

சேனன் என்ற பிரசித்திபெற்ற நாமத்தோடு சம்பா தித்த கீர்த்தியும் கௌரவமும் பெருமையும் போதா வென்று இனிச் சம்பாதிக்கக் கருதுகிறீர்கள்" என்று வியப்போடு கேட்டாள்.

ஜனரல்.—அம்மா! நீ நடந்த சங்கதிகளை மறந்துவிட்டனை போலும். கலகக்காரர் தோல்வியடைந்த பின் யாவர்க் கும் ஒருவித மன்னுப்பு அரசனுலளிக்கப்பட்டது உண் மையே. அதனுற்றுன் உனது கணவர் தமது வீட்டிற் குத் திரும்பிப்போய்ச் சேர்ந்தார். அக்கலகத்தில் அர சனுக்கு விரோதமாக யுத்தம் செய்த கலகக்காரருக் குச் சேனதிபதியாக விருந்த ஜனரல் உக்கிரசேனன் என்ற எனக்கு மட்டும் மன்னுப்பு கிடைக்கவில்லை. அனேக நாட்கள் அரசன் வீரர்கள் என்பின்னுல் துரத் திக்கொண்டே வந்தார்கள். என்னைப் பிடிப்பவர்களு க்கு வெகுமதி யளிப்பதாக விளம்பரம் செய்யப்பட் டிருக்கிறது. நான் பிராணுபத்தினின்றும் மிக்க ஆச் சரியமான விதமாகப் பன்முறை தப்பித்துக்கொண் டேன். அக்காலங்களில் நான்பட்ட கஷ்டங்களும், சிக்கிய ஆபத்துகளும் கேட்போர் நம்பக்கூடாத அவ் வளவு ஆச்சரியமானவைகள். கடைசியில் மிக்க சாமா ர்த்தியமாக என் உருவத்தை யடியோடு மறைக்கத் தக்க விதமாய் மாறுவேடமணிந்து உங்கள் வீட்டிற் குச் சென்றேன். அப்போது நான் சென்றது தெய் வக் கட்டளையே யென்று கருதுகிறேன். ஏனெனில் அச்சமயம் உன் கணவர் மரிக்கும் தறுவாயில் இருந் தார். அவர் மிக்க ஈன ஸ்திதியி லிருந்தார். அவர் பூமி தோட்டம் யாவும் கடன்காரர்கள் கைவசப்படுத் திக் கொண்டார்கள். கடைசியில் தன் மன்னுப்பு,

இதோ அவர் உன்னை மணம் புரிந்ததினம் பிடித்துக் கொண்ட அவருடைய புகைப்படம், அவர் கணையாழி இவை மூன்றையும் தவிர உனக்களிக்க அவரிடம் வேறொன்றுமில்லை," என்று கூறிக்கொண்டே தன் உட்சேபியிலிருந்த புகைப்படத்தையும் கணையாழியை யும் எடுத்து அவளிட மளித்தான்."

அவற்றைக் கையில் வாங்கிக்கொண்ட ஜகதாம்பாள் கண்ணீர் விட்டுக்கொண்டே அவற்றைக் கண்களில் ஒற்றிக் கொண்டு தன் கணவனுக்குத் தான் செய்த துரோகத்திற் காகத் தன்னை அதிகமாக நொந்துகொண்டு "அந்தோ! இத் தகைய இரக்கமும் அன்பும் வாய்ந்த உத்தமராகிய கண வருக்குத் துரோகம் செய்த சண்டாளியாகிய எனக்கு இவைகள்கூடத் தரத்தகாதனவே" என்றாள்.

ஜனரல்:—இப்போது நான் கூறியவைகளால் எத்தகைய ஆபத்துகளுக்குத் துணிந்து நான் இப்போது இங்கு வந்திருக்கிறேனென்பது உனக்கு நன்றாகப் புலப்படும். ஜனரல் உக்கிரசேனன் இங்கு வந்திருக் கிறான் என்று அரசன் மட்டும் இப்போது அறிந்தால் மறுநிமிடம் நான் நகரக்கோட்டையில் சிறைவைக்கப் பட்டுத் துரிதமாக மரணதண்டனைக் குள்ளாக்கப்படு வேன். ஆகையால், அச்சண்டாளன்மேல் நான் பகி ரங்கமாக வஞ்சந் தீர்த்துக்கொள்ள லாகாது. நீயே யக்காரியத்தை நிறைவேற்ற வேண்டும். அதற்கு வேண்டிய கருவிகள் இதோ விருக்கின்றன, தருகி றேன்" என்று கூறிக்கொண்டே தன் ஜேபியி லிருந்த ஒரு கடிதக் கட்டையெடுத்து ஜகதாம்பாளிட மளித்தார்.

ஜகதாம்பாள்:—"ஓ! இது சந்தோஷ சமாசாரமே" என் றாள்.

ஜனரல்:—"நற்காலமாக என்னிடம் கொஞ்சம் பணமிருக்கிறது. என் நண்பரின் மனைவிக்கு நான் கொஞ்சம் உதவி செய்யக்கூடிய நிலைமையிலிருக்கிறேன். இதோ இதைத் தற்சமயம் வைத்துக்கொள்" என்று தன் ஜேபியிலிருந்த பணத்தை யெடுத்தளித்து, "பின்னும் என் சக்திக்குத் தக்க உதவிசெய்வேன். இப்போது நான் கொடுத்த கடிதங்கள், அரியநாதம் பிரபு எங்களுக்கெழுதிய கடிதங்கள், அவற்றில் அவனுடைய கையொப்பமில்லாவிட்டால் அவசியமில்லை. அவற்றிலுள்ள சங்கதிகளாலும் கையெழுத்தாலும் அவனே யவற்றை யெழுதியவன் என்று நன்குவிளங்கிவிடும். அவன் மறுக்க முடியாது. அவன் இக்கடிதங்களில் தன்னைப்பற்றிய நெருக்கமான பல விஷயங்களை யெழுதியிருக்கிறான். நீ இக்கடிதங்களை யெடுத்துக்கொண்டு தைரியமாய் அரசனிடம் சென்று இவற்றைக்கொடுத்துவிட வேண்டும்." என்றார்.

ஜகதாம்பாள்:—"தாங்கள் இதைப்பற்றித் தீர்க்காலோசனை செய்தீர்களா? தாங்கள் பகிரங்கமாக இங்கு வெளியில் வருவது பெரிய ஆபத்தல்லவா? அரியநாதம் பிரபுவே தங்களைக் காணக்கூடும்—தெரிந்துகொள்ளக் கூடும்..." என்றாள்.

ஜனரல் உக்கிரசேனர்:—அக் கடிதங்கள் அரசன் கையிற் கொடுக்கப்பட்ட ஒரு மணி நேரத்திற்குள் அரியநாதம் பிரபு சிறை செய்யப்படுவான். பிறகு நேராய்க் கோட்டைச் சிறைச்சாலைக்குக் கொண்டுபோகப்படுவான். அரசன் துரிதமாக விசாரணை செய்வதும் மரண தண்டனையிடுவதுமாகச் சீக்கிரத்தில் அவன் வேலையை முடித்து விடுவான். அதோடு என்னைக்

கண்டு என்னைத் தெரிந்து கொள்ளக்கூடிய ஒரு மனித னும் ஒழிந்துவிடுவான். நான் இங்கு வந்ததால் அனேக ஆபத்துகளுக்குள்ளாவேன் என்று அறி வேன். ஆனால் நான் ஆபத்துகளில் சாதாரணமாகப் பழகியவன். நான் எத்தகைய ஆபத்திற்கும் அஞ்சு கிறவனல்ல. அவற்றை நான் சட்டை செய்வதே யில்லை. மேலும் என்னிடம் ஒருவித இரக்ஷா பந்த னம் இருக்கிறது. அது என்னை யாபத்தினின்றும் காப்பாற்றும்" என்றார்.

ஜகதாம்பாள்.—"மேற்கு நாட்டிலிருந்தபோது தாங்கள் மிக்க இக்கட்டான பெரிய ஆபத்துகளிலெல்லாம் ஆச்சரியமான விதமாகத் தப்பித்துக்கொண்டதாக வும், தங்களிடம் ஏதோ அபூர்வ சக்தியிருக்கிறதென் றும் எங்கும் பெரிய வதந்தியாக விருந்தது" என் றாள்.

ஜனரல்:—என்னிடத்தில் அபூர்வ சாமார்த்தியம் ஒன்று மில்லை. நான் மிக்க அபாயமான இக்கட்டுகளில் பன் முறை சிக்கிக்கொண்டிருக்கிறேன். அச்சமயங்களில் நான் மிக்க ஆச்சரியமான விதமாகத் தப்பித்துக் கொண்டிருக்கிறேன். அவற்றைக் கூறினால் சிலர் நம் பவே மாட்டார்கள். நான் இரக்ஷாபந்தனம் என்று கூறியது, எனக்குத் தெரிந்திருக்கும் உயர்ந்த அந்தஸ் திலுள்ள ஒருவருடைய இரகசியம். அதை வெளியிடுவ தால் அவர்களுக்குத் தீங்குண்டாகுமாதலால் அவர்கள் அதற்கு இடங்கொடுக்க மாட்டார்கள். அது எப்படி யிருந்தாலும் இருக்கட்டும். என்னைப்பற்றி உனக்குக் கலக்கம் வேண்டாம். நான் என்னை யெப்படியேனும் காப்பாற்றிக்கொள்ள முயல்வேன். நீ மட்டும் நான்

கூறியபடி சற்றும் அஞ்சாது துணிகரத்தோடு அரச னிடம் சென்று அக் கடிதங்களைக் கொடுத்துவிடு. நாணயமான உடை யொன்று வாங்கிக்கொண்டு அரச னிடம் ஆலசியமின்றிச் செல்." என்றார்.

அம்மாது:—"நாளை மாலைக்குள் எப்படியாவது இக்கடிதங் கள் அரசனிடம் சேரும்படி செய்கிறேன். தாங்கள் இங்கு வந்திருக்கும் இரகசியம் என் மனதை விட்டு வெளிக்கிளம்பாது. என்னைச்சித்திரவதை செய்தாலும் நான் அதை வெளியில் கூறமாட்டேன். தாங்கள் எனக் குச் செய்யும் உதவிக்கும், சதாரணமாய்த் தங்களு டைய உதாரகுணத்திற்கும் கம்பீரமான நடைக்கைக் கும் தங்களுக்கு யார் தீங்கு நினைத்தாலும் அவர்கள் கடவுளால் தண்டிக்கப்படுவார்கள்" என்றாள்.

அதன் பிறகு ஜனரல் உக்கிர சேனர் அம்மாதிடம் விடை பெற்றுக்கொண்டு அறையினின்று புறப்பட்டார். அது காறும் கதவின் பின்னாலிருந்து இவர்கள் பேசுவதை உற்றுக் கேட்டுக்கொண் டிருந்த வீட்டுக்கார மாது ஜன ரல் புறப்படுவதை யறிந்ததே துரிதமாக அங்கிருந்து போய்விட்டாள்.

"வரும்போது மிக்க ஏழையான நிலைமையிலிருந்த வளும், வந்தது முதல் எவ்வித வருமானமுமின்றித் தன் நகைகள் சாமான்கள் உடைகள் யாவற்றையும் ஒவ்வொன் றாய் அடகுவைத்தும் விற்றும் காலக்ஷேபம் செய்துகொண் டிருந்தவளுமாகிய இம்மாதிடம் உயர்ந்த அந்தஸ்திலுள்ள இம்மனிதன் வந்திருக்கிறானே, இவன் யார்? என்ன சங் கதி நடக்கிறது?" என்பதை யறிய ஆவல் கொண்டே அம் மூதாட்டி அப்படி உற்றுக்கேட்டாள். அவள் நடந்த சம்பாஷணை முழுதும் கேட்கவில்லை. திட்டமாக என்ன கேட்டாளென்பதும் பிறகு விளங்கும்.

* குறிப்பு—[ஜெனரல் உக்கிரசேனரும் ஜகதாம்பாளும்—பூர்வ சமாசாரங்கள்—அரியநாதம் பிரபுவின் சதிச்செயலும் மற்ற மர்மங்களும்—வஞ்சம் தீர்த்துக்கொள்ள ஏற்பாடுகள்.]

14-வது அத்தியாயம்.

கர்னல் குமரவேலும் அவன் வேவு ஆளும்—கர்னலின் சதிச்செயல்—கர்னலும் அரியநாதம் பிரபுவும்—துரோகச் செயல்களும் திடுக்கிடும் சம்பவங்களும் ஆரம்பமாதல்—அரசனும் பஞ்சநாதம் பிரபுவும்—அரியநாதம் பிரபுவும் அரசனும்.

ஜெனரல் இரத்தசாலையினருகில் வந்தபோது தன் வேலையாளான அப்பாசாமியை ஹோட்டலுக்குச்செல்லும்படி கட்டளையிட்டானென்று கூறினேமல்லவா. அதைக்கேட்டதே அவ்வாலிபன் மிக்க சந்தோஷத்தோடு சென்றான். அவன் நேராய்க் காமதேனு ஹோட்டலுக்குச்சென்று கர்னல் குமரவேலைக்கண்டு காப்டன் சென்றிருக்குமிடத்தைக் கூறினன்.

காப்டன் உத்தண்டி இரத்தசாலை யென்ற இழிந்த விடத்திற்குச்சென்றதைப்பற்றிக் கர்னல் மிக்க வியப்படைந்தானாயினும், காப்டனைப்பற்றிய விஷயம் எதுவாயினும் அதை யறிய வேண்டு மென்று தீர்மானித்துக்கொண்டான். காப்டன் உத்தண்டி திரும்பி வந்ததைக் கண்டவுடனே கர்னல் ஆலசியமின்றிப் புறப்பட்டு இரத்தசாலைக்குச்சென்றான். அங்கு சென்றதும் சுலபமாகவே காப்டன் உத்தண்டி

*[ ] இக்குறிக்குள் இருப்பதை 13-வது அத்தியாயத்தின் தலைப்பில் குறிக்கப்பட்ட விஷயங்களோடு சேர்த்துக்கொள்ளவும்.

எந்த வீட்டிற்குச் சென்ருன் என்பதை, அவன் உடை முதலிய அடையாளங்களைக்கூறி விசாரித் தறிந்துகொண்டு, அவ்வீட்டின் கதவைத்தட்டினுன்.

ஜகதாம்பாள் வசிக்கும் வீட்டுக்காரியே வந்து கதவைத் திறந்தாள். அவள் முகத்தைக் கண்டதும், அத்தகைய விஷயங்களில் நல்ல உலக அனுபவமுடைய கர்னல், அவள் காசுக்கு எத்தகைய இழி தொழிலும் செய்வாளென்று உடனே தெரிந்து கொண்டு, அவளிடம் ஒரு ரூபாயை யளித்து "அம்மா, நீ மிக்க நல்ல மாது போல் தெரிகிறது. நான் உன்னிடம் ஒரு சங்கதியைப்பற்றிப் பேசவேண்டும்" என்ருன்.

முழுரூபாயின் பரிசம் கையிற்பட்டதே கிழவி நமக்கு இன்று நல்ல காலமெனக் கருதி கர்னலை மரியாதை யோடு உள்ளே கீழ்க்கட்டிலுள்ள தன் அறைக்கு அழைத்துச் சென்று ஆசன மளித்து உபசரித்தாள். கர்னல் "அம்மா இந்த ஒரு ரூபா உனக்கு முன் இனமாக வளித்தேன். நான் கேட்கும் விஷயங்களைப்பற்றி நீ யுண்மையான விடை யளித்தால் இன்னெரு ரூபா அளிப்பேன்" என்ருன். அம்மாது "அய்யா அப்படியே கூறுகிறேன்" என்ருள்.

கர்னல்:—இரண்டொரு மணி நேரத்திற்கு முன் இங்கு குதிரைப்படை யுத்தியோகஸ்தர் போல்உடையணிந் திருந்த ஒருவர் வந்திருந்தாரல்லவா ?

கிழவி:—ஆம் அய்யா. அதனுல் எனக்கொரு கெடுதியு மில்லையே. நான் ஏழை; அவர் என்னைக்காண இங்கு வந்தவரல்ல.

கர்னல்:—நான் கேட்பதற்கு நீ உண்மையான விடையளித்து விட்டால் உனக்கொரு தீங்கும்வராது! அந்த ஆள் யாரைக்காண வந்தான் ?

மூதாட்டி:—மேல்மாடியில் வசிக்கும் ஒரு ஏழை மாதைக் காண வந்திருந்தான்.

கர்னல்:—அம்மாதின் பெயர் ?

மூதாட்டி:—"ஜகதாம்பாள்" என்றதைக்கேட்டதே கர்னல் திடுக்கிட்டு விட்டான்.

ஏனெனில் கர்னல் மார்த்தாண்டன் என்ற ஒருவன் மேற்கு நாட்டில் சின்னக் கட்சி அரசனுக்கு விரோதமாகக் கிளம்பிய கலகக்காரரின் படைத்தலைவனாக விருந்தானென் பதும், அவன் மனைவியின் பெயர் ஜகதாம்பாளென்பதும், ஜெனரல் உக்கிரசேனன் என்பவன் அக்கலகக்காரரின் சேனாதிபதியாக விருந்தவன் என்பதும் கர்னல் கேள்வியால் நன்கறிந்திருக்கிறான். பின்னர் "இம்மாது எவ்வளவு கால மாக இங்கிருக்கிறாள் ?" என்றான்.

மூதாட்டி:—இவள் இங்கு வந்து ஒருவருடமாயிற்று. இதற்கு முன் இரண்டு வருடங்களாகப் பெரிய வீதி யில் ஒரு வீட்டிலிருந்தாள். ஆனால் இவள் ஒரு மாதிரி யாக விருந்ததால் அவ்வீட்டுக்காரர் இவளை வெளியி லனுப்பி விட்டார்கள்.

கர்னல்:—ஒரு மாதிரியா யிருந்தாள் என்றால் என்ன சங்கதி ?

மூதாட்டி:—இரவில் அவள் தனக்குத்தானே பேசிக்கொள் வதுண்டு. அவள் யாரையோ சபித்துக்கொண்டிருப் பதும், தன்னை மன்னிக்கும்படி யாரையோ கேட்டுக் கொள்வதும், நித்திரை செய்யாமல் இரவில் அறையில் உலவிக்கொண்டிருப்பதுமாக விருந்தாள்.

கர்னல்:—அவள் இங்கு வசிப்பதைப்பார்த்தால் மிக்க ஏழ் மையான நிலைமையிலிருக்கிறாள் போல் காண்கிறது.

மூதாட்டி.—ஆம். அவள் தன் சாமான்களையும், நகைகளையும், உடைகளையும் விற்று விற்று ஜீவித்துக்கொண்டிருந்து கடைசியில் இப்போது மிக்க பரிதாப நிலைமையி லிருக்கிறாள்.

கர்னல்.—இவளிடத்தில்தான் அம்மனிதன் பேசவந்தானோ

கிழவி.—ஆம்.

கர்னல்.—இப்போது உனக்கு ஒரு ரூபாயே கொடுத்திருக்கிறேன். அவன் என்ன சங்கதிக்காக வந்தானென்பது தெரியுமா? உன் முகத்தால் உனக்குத் தெரியுமென்றே கருதுகிறேன். பயப்படாமற் கூறு.

கிழவி.—அய்யா நான் உண்மையைக் கூறுகிறேன். இவள் இவ்வளவு ஏழையாக இருக்கிறாளே, இவளிடம் அத்தகைய மனிதன் வந்து என்ன சங்கதி பேசப்போகிறான் என்ற ஆச்சரியத்தால் அவர்கள் இருவரும் பேசும்போது உற்றுக்கேட்டேன்.

கர்னல்.—ஓ அவ்வளவுதானே அதனாற் குற்றமில்லை. என்ன பேசினார்கள்? அதை யுண்மைப்படிக் கூறு.

கிழவி.—அவர்கள் பேசியது முழுமையும் எனக்குக் கேட்கவில்லை. அங்கு கொஞ்சம் இங்கு கொஞ்சந்தான் எனக்குக் கேட்டது. சமீபகாலத்தில் இவள் கணவன் எங்கோ தூரதேசத்தில் மடிந்துபோனான். அவன் இந்த ஜனரல் உக்கிரசேனன்...'' என்றதே, கர்னல் திடுக்கிட்டு "என்ன? உக்கிரசேனனா! இருக்கட்டும். அவன் மூலமாக...?'' என்றான்.

கிழவி.—அவள் கணவன் இறக்கும்போது இந்த ஜனரல் உக்கிரசேனன் மூலமாகத் தன் புகைப் படத்தையும் மன்னிப்பையும் அவளுக் கனுப்பி யிருக்கிறான். அவள் அடிக்கடி ஆத்திரத்தோடு பேசினாள். இடையில்

ஏதோ முக்கியமான கடிதங்களைப்பற்றிப் பேச்சு நடந்தது. இடையிடையில் அரியநாதம் பிரபுவின் பெயரும், அரசன் என்ற வார்த்தையும் கூறப்பட்டன. இன்னொரு விஷயம்—அது நிச்சயமென்று கூறமுடியாது. ஜகதாம்பாளே கூடிய சீக்கிரத்தில் நேராக அரசனைக் காண ஏற்பாடு நடந்ததாகத் தெரிகிறது. இவ்வளவே சங்கதி நான் கேட்டது" என்றாள்.

கர்னல்.—"நன்றாய் யோசித்துப் பார்! இன்னும் என்ன பேசினார்கள்?" என்றான்.

மூதாட்டி.—"என்ன யோசித்தாலும் இவ்வளவே நான் கேட்டது" என்றாள்.

கர்னல்.—"சரி. இந்தா! இதோ இரண்டு ரூபாய். நான் உன்னிடம் இதைப்பற்றி விசாரித்ததை அம்மாதிடமேனும் வேறு யாரிடமேனும் கூறப்போகிறாய் பத்திரம். இதைப்பற்றி பிரஸ்தாபமே செய்யலாகாது. அப்படியிருந்தால் ஒரு கெடுதியும் வராது. வெளியில் ஒரு வார்த்தை கூறினாயோ கெடுதியாய் முடியும்" என்றான்.

மூதாட்டி.—இல்லை. நான் ஒருவரிடமும் கூறமாட்டேன் என்றாள். அதன்மேல் கர்னல் குமரவேல் அங்கிருந்து புறப்பட்டான்.

இப்போது அவன் தான் இன்னது செய்யவேண்டுமென்பதைப் பற்றித் திட்டமாக மனதில் தீர்மானித்துக் கொண்டான். எவ்வாறெனில், ஜனரல் உக்கிரசேனனைப் பிடித்துக் கொடுப்போர்க்குப் பெருந் தொகை பரிசளிக்கப் படுமென்று பிரசுரம் செய்யப்பட் டிருக்கிறது. அதோடு அரியநாதம் பிரபு உயர்ந்த பதவியும் பிரபுபட்டமு மளிப்பதாக வாக்களித்திருக்கிறார். ஆகையால் ஜனரல் உக்கிர

சேனன் நட்பைப் பெறுவதால் அடையும் நன்மையைக் காட்டிலும் அரியநாதம் பிரபுவின் மூலமாக அதிக நன்மை யைச் சீக்கிரத்தில் அடையலாம் என்று தனக்குள் தீர் மானித்துக்கொண்டான். ஆகையால் அவன் ஹோட்டலுக் குப் போகாமலே நேராய் அப்பிரபுவின் மாளிகையை நோக்கிச் சென்றான்.

கர்னல் பிரபுவைக் காணும்போது அவர் போசன மருந்திவிட்டு நிம்மதியாக உட்கார்ந்துகொண் டிருக்கிறார். இவனைக் கண்டதும் இவன் ஏதோ விசேஷ சமாசாரம் கொண்டுவந் திருக்கிறான் என்று அவன் முகக் குறியால் பிரபு அறிந்துகொண்டு "ஆ கர்னல்! என்ன சமாசாரம்?" என்றார்.

கர்னல்.—பிரபுவே! மதனம்பாள் சீமாட்டி வீட்டில் நாம் பேசியபோது ஒரு சங்கதியை நான் கண்டறிந்து கூறினால் எனக்கு உயர்பதவியும் பட்டமும் அளிப்ப தாய்த் தாங்கள் வாக்களித் திருக்கிறீர்களல்லவா?

பிரபு.—ஆ! அப்படியாயின் அந்த விஷயத்தில் நீ ஜய மடைந்தாய்.

கர்னல்.—ஆம். மாந்திரீகன் வேடந் தரித்திருந்தவன் யார் என்று கண்டுபிடித்து விட்டேன்.

பிரபு.—"ஆகா! அவன் யார்? கூறு கூறு" என்றார்.

கர்னல் "பிரபுவே! அவன் ஜனரல் உக்கிரசேனன்" என்றதே பிரபு துள்ளி யெழுந்து "என்ன? மேற்கு நாட் டுக் கலகக்காரர் தலைவனாக விருந்த சேனாதிபதியா?" என் றார். கர்னல் அவனே என்றான்.

இதைக் கேட்டதே பிரபுவின் முகம் கறுத்துவிட்டது. அவர் உள்ளத்தில் திகிலுண்டாயது. "ஆகா! நான் அவன் என்று கருதவில்லை. கர்னல் மார்த்தாண்டனாக விருக்கு

மென்றே நினைத்தேன்" என்றார். கர்னல் "பிரபுவே! மார்த்தாண்டன் இறந்துபோனான்" என்றான். பிரபு "ஆ! எனக்கு மிக்க பயங்கரமான விரோதி மடிந்தான். இந்த ஜனரல் உக்கிரசேனன் எங்கே பதுங்கிக்கொண் டிருக்கிறான்" என்றார்.

கர்னல்.—அவன் துணிகரம் பாருங்கள். அவன் தன் உருவத்தைச் சற்றேனும் மறைத்துக்கொள்ள முயலாமலே பகிரங்கமாகக் காமதேனு என்ற ஹோட்டலில் தங்கியிருக்கிறான். இதற்காக அவன் தான் இங்கு வந்திருப்பதை மறைக்கச் செய்யும் முயற்சி யெல்லாம் கூடி மாறுபெயர் வைத்துக்கொண் டிருக்கிறானே—அது ஒன்று தான்.

பிரபு—என்ன மாறுபெயர்?

கர்னல்.—"காப்டன் உத்தண்டி யென்று கள்ளப் பெயர் வைத்துக்கொண் டிருக்கிறான். இன்னொரு சங்கதி. அவன் இன்று கர்னல் மார்த்தாண்டன் மனைவியைச் சந்தித்திருக்கிறான்" என்றான்.

இதைக் கேட்டதே பிரபு மிக்க திகிலடைந்து "ஆ! ஜகதாம்பாள். எங்கே யிவர்கள் சந்தித்தார்கள். என்ன பேசினார்கள்? சீக்கிரம் கூறு! கூறு!" என்று மிக்க ஆத்திரத்தோடு கேட்டார்.

கர்னல்.—"அம்மாது இரத்தசாலையென்ற மிக்க இழிவான ஒரு இடத்தில் வசிக்கிறாள். அவர்கள் பேசிய சங்கதி விவரமாகப் பூராய் இன்னதென்று தெரியாது. அதை யுற்றுக் கேட்டிருந்து எனக்குக்கூறியமாது இடையிடையில் சில வார்த்தைகளையே கேட்டாள். இடையிடையில் அரசன் பெயரும் தங்கள் பெயரும், சில முக்கியமான கடிதங்கள் என்றதும் கூறப்பட்டன.

அதோடு ஜகதாம்பாள் சீக்கிரத்தில் அரசனைக்காண வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரிய வருகிறது.'' என்றான்.

இதைக்கேட்டதே பிரபுவின் முகம் மிக்க இருளடைந்தது. அவர் கர்னலை நோக்கி "அவள் அரசனைக் காணக்கருதுவது அக்கடிதங்களின் சம்பந்தமாக விருக்குமோ?'' என்றார். கர்னல் "அதைப்பற்றி நிச்சயமாக நான் கூற முடியாதேனும் அப்படித்தான் தோன்றுகிறதென்று கருதுகிறேன். பிரபுவே! இவ்வளவே சங்கதி. ஆனால் தாங்கள் வாக்களித்த உயர்ந்த அந்தஸ்து மேல் உத்தியோகம் இவைதவிர ஜனரல் உக்கிரசேனனைப்பிடிப் போர்க்களிப்பதாகப் பிரசுரம் செய்யப்பட்டிருக்கும் பரிசும் எனக்களிக்கப்படவேண்டும்.'' என்றான்.

பிரபு:—"அப்படியே யாகட்டும்; நீ நாளை மாலை யிங்குவா. அப்பரிசையளிப்பதோடு உயர்ந்த உத்தியோகத்திற்கு வேண்டிய பத்திரமும் ஆயத்தமாயிருக்கும். அதோடு உனக்குப் பட்ட மளிக்க நாளும் குறிக்கப்படும்'' என்றார். கர்னல் குமரவேல் வந்தன மளித்து விட்டு விடை பெற்றுச்சென்றான்.

கர்னல் சென்றதே அரியநாதம் பிரபு "ஆ! ஜனரல் உக்கிரசேனன்! நாம் இருவரும் ஏககாலத்தில் இவ்வூரில் இருக்க முடியாது. நம்மிருவரில் ஒருவர் ஒழியவே வேண்டும். ஆனால் நான் முந்திக்கொள்ள வேண்டும்.

ஆகா! என் செவியில் என்ன கூறினாய்! 'நம்பிய சினேகனாகிய கர்னல் மார்த்தாண்டனுக்குப் பெருஞ்சதி செய்த துரோகி; அவனுக்கும் ஜனரல் உக்கிரசேனனுக்கும் அந்நாட்டார்க்கும் துரோகம் செய்த சண்டாளன்.' ஆகா! அடே உனக்கு என்ன தைரியம். இதற்குத் தக்க வஞ்சம்

தீர்த்துக்கொள்கிறேன் பார்! ஒரு விநாடிகூட ஆலசியம் செய்யலாகாது. உடனே அரசனிடம் செல்ல வேண்டியதே” என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான்.

* * * * * *

அதே தினம் மாலை நான்கு மணியிருக்கும். அப்போது சுத்தசிங்க ராஜன் தன் அறையில் தனியாக விருந்துகொண்டு யாருக்காகவோ எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். சற்று நேரத்திற்குள் நமது காப்டன் உலக நாயகனுடைய அம்மானாகிய ஸர்தார் பஞ்சநாதம் பிரபு அரசனைக் காணவந்தார்.

அரசன் முகக்கடுப்போடு தன்னை வரவேற்றதைக்கண்டதே ஸர்தார், அரசன் தன்மேல் ஏதோ மனஸ்தாபங்கொண்டிருக்கிறான் என்று அறிந்து கொண்டார். அதனு அரசனை நோக்கி,

“மகாராஜா! நான் என் அரசனிடம் அன்போடும் சத்திபத்தோடும் ஊழியம் செய்துகொண்டிருந்தபோதிலும் எவ்வாற்றானோ நான் மகாராஜா அவர்களது வெறுப்பிற்குப் பாத்திரவானாகி யிருக்கிறேன் என்று தோன்றுகிறது.” என்றார்.

அரசன்:—ஆம் பிரபுவே! ஒரு முக்கியமான விஷயத்தில்-மிக்க முக்கியமான விஷயத்தில்-தவறி விட்டீர். அது ஒரு முக்கியமான இரகசியம். அதை விவரமாகக் கூறலாகாது. அந்த இரகசியத்தைப் பாதுகாப்பதில் நீர் தவறி விட்டீர்.

பிரபு:—அரசரே! என் பிராணனே நீங்குவதாயினும் நான் அப்படிப்பட்ட தவறுதலைச்செய்யவே மாட்டேன்.

அரசன்:—அப்படி யிருந்தும் அந்த இரகசியம் எப்படியோ வெளிப்பட்டுவிட் டிருக்கிறது. நீர் உம்மையு மறியாது, போதையிலிருந்த சமயத்தில் எப்படியோ அதை வெளியிட் டிருக்கவேண்டும். அல்லது நித்திரையில் கனவு காணும் போது அதைக் கூறிவிட் டிருக்கவேண்டும். அப்போதுயாரேனும் அருகிலிருந்து கேட்டிருக்கவேண்டும்.

பிரபு:—மகாராஜா ! நான் ஒருபோதும் அவசரப்பட்டு ஒரு வார்த்தை யதிகமாகப் பேசுகிறவனல்ல. எப்போதும் அதிகமாகப் போதை வஸ்து அருந்துகிறவனுமல்ல. நித்திரையில் என்னை யறியாது பேசியிருப்பேனோ என்னமோ அதைப்பற்றி நான் நிச்சயமாகக் கூறமுடியாது. ஆயினும் அவ்வழியாகவும் இன்னொருவர் செவியில் ஒன்றும் விழுந்திராது என்பது மட்டும் நிச்சயம். எப்படி யெனில், நான் தினம் என் அறையின் கதவை மூடிப் பூட்டிக்கொண்டே நித்திரை செய்வது. அந்த அறையின் சுவர்கள் பலமான தடித்த சிந்துர மரப் பலகைகள் தைக்கப்பட்டவை.

அரசர்:—அப்படியிருந்தும் அந்த இரகசியம் எப்படியோ வெளியாகிவிட் டிருக்கிறது. ஆம், உண்மையாகவே வெளியாய்விட் டிருக்கிறது. இந்த இரகசியத்தை யறிந்த நால்வரில் இருவர் இறந்து நெடுங்கால மாயிற்று. நாம் இருவருமே யிருக்கிறோம். அப்படி யிருந்தும் இது இன்னொருவருக்குத் தெரிந்திருக்கிறது. ஒருசமயம் உமது மனைவி யாருக்கேனும் கூறி யிருக்கலாகுமோ ?

பிரபு:—அரசே ! அவள் எதற்காக அதை வெளியிடவேண்டும்? தாங்கள் எங்களுக்குச் செய்த பல நன்மைகளுக்

காக அவள் எப்போதும் நன்றியுடையவள். அரசர் விஷயத்தில் சத்தியமான அன்பும் பக்தியு முடைய வள். இல்லை யில்லை. அவள் அப்படிப்பட்டவளல்ல. மேலும் அவள் இறந்து போய் பதினைந்து வருடங் களாயின. அவள் யாரிடமேனும் அதை வெளியிட் டிருந்தால் இதுகாறும் அச்சங்கதி வெளிவராமல் இப் போதுதானு வரும்.

அரசன்.—ஆம். ஆம். உண்மையே. நண்பரே! நான் உம் மேற் சந்தேகங்கொண்டது தவறே. அதற்காக மனத் தாங்கலடையவேண்டாம். அது எப்படி வெளியா யிற் றென்பதுதான் எனக்குச் சற்றும் விளங்கவில்லை.

பிரபு.—அரசே! அதைப்பற்றி யாரேனும் தங்களிடம் பிர ஸ்தாபித்தார்களோ?

அரசன்:—அதுதான் மிக்க ஆச்சரியம். கடந்த இரவு மத ஞும்பாள் சீமாட்டியின் மாளிகையில் முகமூடி விரு ந்து நடந்தது. அங்கு வந்தவர்களில் ஒருவன் மாந் திரீக வேடந்தரித்திருந்தான். அவன் மிக்க சாமார்த் தியமாக நடித்தான். நான் "ஏதோ உன் சாமார்த்தி யத்தால் என்னைப்பற்றிய சங்கதி எதையேனும் என் செவிகளில் கூறு பார்ப்போம்" என்றேன். அவன் அந்த இரகசியத்தைக் கூறியதே நான் சொல்லொணு வியப்படைந்து, ஒழுங்கு தவறி அவன் முக மூடி யைக் களையச்செய்து அவன் முகத்தைப் பார்த்தேன், உனக்கு மட்டுமே அந்த இரகசியம் தெரியுமாதலால் நீதான் அப்படி வேடந்தரித்து வந்து கேலியாகக் கூறினுயென்று கருதினேன். அவன் முகத்தைப் பார்த்தபோது அவன் நான் ஒருபோதும் காணுத மனிதனுக விருந்தான். ஆனல் மிக்க அழகும் கம்பீர

மும் வாய்ந்த முகமுடையவன். உஷ்ண தேசவாசத்தால் அம்முகம் கொஞ்சம் கருத்திருந்தது.

பிரபு:—"உண்மையில் இது மிக்க வியப்பாகவே யிருக்கிறது. எப்படி யென்று சற்றும் விளங்கவில்லை." என்றார்.

பிறகு சற்று நேரத்திற்குள் பஞ்சநாதம் பிரபு விடைபெற்றுக்கொண்டு சென்றார். இரண்டொரு நிமிடங்களுக்குள் அரியநாதம் பிரபு அரசனிடம் வந்தார்.

அரசன் அவருடைய முகக்குறியால் அவர் ஏதோ விசேஷ சங்கதி கொண்டுவந் திருக்கிறாரென் றுணர்ந்து "பிரபுவே என்ன விசேஷம்?" என்றான்.

அரியநாதம்:—"மகாராஜா! நான் ஒரு முக்கியமான சமாசாரம் கொண்டுவந் திருக்கிறேன். அது இன்னொரு இராஜ விசுவாசி மூலமாகக் கிடைத்தது. அந்த விஷயத்திற்குத் தாங்கள் அளிப்பதாகப் பிரசுரம் செய்திருக்கும் பரிசை யன்னியில் வேறு விசேஷசன்மானமும் அவனுக்கு அளிக்கப்பிரார்த்திக்கிறேன்" என்றார்.

அரசன்:—"எனக்கு மிக்க ஆச்சரியத்தையும் மனத்துடிப்பையும் உண்டாக்கி விட்டீர். இனி ஆலசியம் செய்யாமல் அது என்ன சங்கதி கூறும்" என்றான்.

பிரபு "அரசரேறே! மேற்கு நாட்டில் தங்களுக்கு விரோதமாக இருந்தானே ஜனரல் உக்கிரசேனன்..." என்றதே,

அரசன் திடுக்கிட்டு "ஆ! அவனுக்கென்ன? எங்கே அவன்? சிறையாக்கப்பட்டானா?" என்று ஆத்திரத்தோடு வினவினான்.

பிரபு:—இல்லை. தாங்கள் உடனே சில வீரர்களை யனுப்பி அவனைச் சிறைசெய்யும்படி செய்யலாகும். அவன் காப்டன் உத்தண்டி என்ற கள்ளப்பெயரோடு காம தேனு ஹோட்டலில் தங்கி யிருக்கிறான்.

அரசன்:—சரி. அவன் வேலையை ஒரு நொடியில் முடித்து விடுகிறேன். சிரச்சேதமே அவனுக்குரிய தண்டனை யாகும்.

பிரபு:—"மகாராஜா! இன்னொரு விஷயம். அவனுடைய துணிகரத்தைப் பாருங்கள்; எவ்விதமாகவோ அவன் தங்கள் அரண்மனைக்குள் வந்திருக்கிறான்." என்றார்.

இதைக்கேட்டதே அரசன் மிக்க கோபமும் வியப்பு மடைந்து "என்ன? இது உண்மையா?" என்றான்.

பிரபு:—"ஆம். இரவு மாந்திரீக வேடமணிந்து முகமூடி விருந்திற்கு வந்திருந்தவன் அவனே." என்றார்.

அரசன்:—"ஆகாகா. அவனு என்செவியில் அந்த இரகசியத் தைக்கூறினவன்; எவ்விதமாக அவன் அதையறிந்து கொண்டிருப்பான்?" என்று தனக்குத்தானே கூறிக் கொண்டான்.

ஆனால் அம்மொழிகள் பிரபுவின் செவிகளில் விழ, பிரபு இதுவும் நல்ல சமயமென்று "மகாராஜா! எக்காரணத் தாலாவது அவன் தங்களுடைய இரகசியம் எதையேனும் அறிந்துகொண் டிருந்தால், ஆலசியமின்றி யுடனே அவன் வேலையை முடித்து விடுவதுதான் சரியான மார்க்கம்." என்றார்.

அரசன்:—"ஆம். அவன் அந்த இரகசியத்தை யெப்படி யறிந்திருந்தாலும் இருக்கட்டும்; நீர் உடனே என்

காரியதரிசியை யழையும்; அத்துஷ்டனைச்சிறைப்படுத் தக் கட்டளை பிறப்பிக்கிறோம்" என்றான்.

பிரபு:—"ஆம் மகாராஜா! அந்த இரகசியத்தை அவன் இன்னொருவரிடம் கூற அவகாச மளிக்கலாகாது. இன்றிரவே யவன் கோட்டைச் சிறைச்சாலையில் நித்திரை செய்யும்படி செய்யவேண்டும். அங்கு ஒரு தனி அறையில் பலத்தகாவலில் வைக்கப்படுவது நலம். அவனிடம் செல்லும் ஆள் மகாராஜாவிடம் பூரணபக்தி யுடையவனாகவும் நம்பத்தக்கவனாகவும் இருக்கவேண்டும். அவனிடம் கூட ஒரு எச்சரிக்கை செய்து வைப்பது நலம். அதாவது ஜனரல் உக்கிர சேனனுக்குப் புத்திசபலித்திருக்கிற தென்றும் அவன் நடவாத சங்கதிகளை யெல்லாம் நடந்தவையாகக் கருதிப் பேசுகிறானெனவும் கூறி வைப்பது நலம்." என்றான்.

அரசன்:—"பேஷ் நீ கூறுவதே நல்ல தந்திரமான யோசனை" என்றான்.

பிரபு:—மேலும் அவன் மரணதண்டனைக்குரியவன் என்று விளம்பரம் செய்யப்பட்டிருப்பதால் விசாரணை முதலிய ஒரு சடங்கும் நடக்க வேண்டிய அவசியமேயில்லை. மகாராஜா அவர்கள் கட்டளையே போதுமானது. இப்போது இவன்றான் அந்த ஜனரல் உக்கிர சேனன் என்று ஒருவர் சாக்ஷி கூறவேண்டும். அவ்வளவே வேண்டியது.

அரசன்:—அந்தச் சாக்ஷியத்தை நீரே கூறிவிடலாம். நீர் மேற்கு நாட்டிலிருந்தபோது அவனைப்பார்த்திருக்கலாமல்லவா?

பிரபு:—ஆம், மிகச் சொல்பமாகப் பார்த்திருக்கிறேன். ஆயி

னும் அவனே ஜனரல் உக்கிரசேனன் என்று கண்டு கொள்ள அவ்வளவே போதுமானது.

அரசன்:—ஆ! அவன் உம்மைக்கூடதிடுக்கிடும்படி உமது செவியில் எதையோ கூறியது எவ்வாறு என்று இப்போது தெரிந்து கொண்டேன். அது அந்த நாட்டில் நடந்த எதுவோ ஒரு இரகசியம். அதுயாருக்கும் தெரியாதென்று நீர் எண்ணி யிருந்தீர் போலும்.

பிரபு:—மகாராஜா கூறியது உண்மையே. அது ஒரு ஸ்திரீ விஷயம். அது யாருக்கும் தெரியாதென்றே யெண்ணி யிருந்தேன்.

அரசன்:—சரி இதைப்பற்றிய விஷயம் இன்னும் என்னவிருக்கிறது? இதில் உதவி செய்தது யார்? யாருக்குப் பரிசு அளிக்க வேண்டு மென்று கூறினீர்?

பிரபு:—இதில் உதவி செய்தவன் முதல்தர இராஜ பக்தியுடையவன். எட்டிக்குடியிலிருக்கும் குதிரைப்படையின் கர்னலாகிய குமாரவேல் என்பவன். அவனுக்கு உதவி ஜனரல் பதவியும் சத்தவீரன் பட்டமுமளிக்கலாகுமென்பது என் பிரார்த்தனை.

அரசன்:—அப்படியே. அதற்குவேண்டிய கட்டளைகளைப் பிறப்பிப்போம். நீர் ஜனரல் உக்கிரசேனனை ஒரு மணி நேரத்திற்குள் கைது செய்யும்வேலையைக் கவனியும். அவன் இந்த இரவு சிறைச்சாலையி லிருக்கவேண்டும். நான் நாளைக்கு மந்திராலோசனைச் சபையைக் கூட்டி அவனுக்கு மரணதண்டனை யுத்தரவு பிறப்பித்து விடுகிறேன்” என்றான்.

அரியநாதம் பிரபு அரசனிடம் விடை பெற்றுக் கொண்டு சந்தோஷத்தோடு அங்கிருந்து புறப்பட்டான். தான் மேற்கு நாட்டில் கலகக்காரரோடு சேர்ந்து கொண்

டிருந்த சங்கதியை வெளியிடுவதற்கு ஜனரல் உக்கிரசேன னுக்கு அவகாசம் அளிக்கப்படாமலே அவன் சிரச்சேதம் செய்யப்படுவான் என்ற நம்பகத்தால் பிரபுவுக்கு மிக்க சந் தோஷமுண்டாயிற்று; ஆயினும் ஜகதாம்பாள் விஷயத்தில் அவன் அஞ்சவேண்டியிருக்கிறது. உக்கிரசேனன் விஷ யத்தில் தான் ஜெயமடைந்து விட்டதாகவே அவன் நம்பி விட்டதால் அவள் விஷயத்திலும் அப்படியே சுலபமாய் ஜெயமடைலாம் என்று தீர்மானித்துக்கொண்டான்.

15-வது அத்தியாயம்.

காப்டன் உத்தண்டியும் உலகநாயகனும் சந்தித்தல்—அமராவதியின் ஆபத்தும் எச்சரிக்கையும்—ஜேனரல் உக்கிரசேனன் சிறைப்படுத்தப்படல்—கர்னல் உத்தண்டி ஜகதாம்பாளை வஞ்சித்தல்.

அரியநாதம் பிரபு அரண்மனையை விட்டுப் புறப்படும் போது மாலை சுமார் ஆறு மணியிருக்கும். அதே வேளையில் (ஜனரல் உக்கிரசேனன்) காப்டன் உத்தண்டி காமதேனு ஹோட்டலிலிருந்து புறப்பட்டுச் சற்று தூரத் திலுள்ள சுந்தரநாய்க்கர் தோட்டத்தை நோக்கிச் சென் ருன். அதன் வாயிலருகில் காப்டன் உலகநாயகன் சுமார் அரைமணி நேரமாக உலவிக்கொண்டிருக்கிருன். அவன் தன் கரத்தில் ஒரு குட்டையைப்பிடித்துத் தொங்கவிட்டுக் கொண்டிருக்கிருன். தன்னை அங்கு அந்த வேளையில் சந் திக்கும்படி ஏற்பாடு செய்த மனிதன் தன்னையறிந்துகொள் வதற்காக இந்த அடையாளம் ஏற்பாடு செய்யப்பட்டது. மாந்திரீக வேடந்தரித்திருந்த காப்டன் உத்தண்டி நமது உலகநாயகன் செவியில் "நீ காப்டன் உலகநாயகன். அமரா

வதியைப்பற்றி ஒரு முக்கிய சமாசாரம் இருக்கிறது. நாளை மாலை ஆறு மணிக்குக் கட்டாயம் சுந்தர நாய்க்கன் தோட்டத்து வாயிலண்டை என்னைச்சந்தி'' என்று கூறியிருந்தான். அதைக் கேட்டது முதல் உலகநாயகனுக்குச் சொல்லொணு வியப்பாகவேயிருந்தது. நம்மைப்பற்றிய இந்த விஷயத்தை யறிந்த ஆள் யார் என்று அவன் தன்னுலான வரை சிந்தித்துப் பார்த்தும் எள்ளளவாவது விளங்கவில்லை. இப்போது அந்த ஆளுக்காக மிக்க ஆவலோடு அங்கு காத்துக்கொண் டிருக்கிறுன். அந்த இடம் அவ்வளவாக ஜன சஞ்சாரமுள்ள இடமல்ல. அவ்வழி வரும் ஒவ்வொருவரையும் ஆவலோடு அவன் நோக்கினுன். ஆனுல் ஒருவரும் தன்னை நோக்கி வரவில்லையென்று ஏக்கத்தோடிருந்தான்.

கடைசியில் காப்டன் உத்தண்டி தன்னை நோக்கி வருவதைக்கண்ட உலகநாயகன் மனக்களிப்படைந்தான். காப்டன் அவனருகிற்சென்று அவன் கரத்தைப்பற்றிக்கொண்டு "காப்டன் உலகநாயகன் என்று நம்புகிறேன்'' என்றுன். உலகநாயகன் "ஆம்; தாங்கள் மாந்திரீக வேடந்தரித்திருந்த போது இங்கு வந்து தங்களைச் சந்திக்கும்படி கூறியது என்னைத்தான்'' என்றுன்.

காப்டன் உத்தண்டி:—"முதலாவதாக நான் ஒரு சங்கதி கூறுகிறேன். மாந்திரீக வேடமணிந் திருந்தவன் நான்றுனென்பது நம்மிருவருக்குள்ளேயே யிருக்க வேண்டும்'' என்றுன்.

உலகநாயகன்:—"நான் மிக்க ஜாக்கிரதையோடு மாறு வேடமணிந்து வந்தேன். என் நெருங்கிய சிநேகன் கூட என்னை யறிந்துகொண்டிருக்க முடியாது. அப்படி யிருக்கப் புது மனிதராகிய தாங்கள் என்னை யறி

ந்துகொண்டது எனக்கு மிக்க வியப்பாகவே யிருந்தது." என்றான்.

காப்டன் உத்தண்டி:—எனக்கு மிக்க உலக அனுபவமுண்டு. மேற்கு நாட்டிலுள்ள ஜனங்கள் ஆட்களை யறிந்து கொள்வதில் மிக்க தந்திரமும் சாமார்த்தியமுமுடையவர்கள். அவர்களிடத்தில் எனக்கு மிக்க பழக்கமுண்டு. மேலும் கர்னல் குமரவேல் மூலமாக உன் பெயரும் நீ அந்த முகமூடி விருந்துக்கு வருவாயென்பதையும் அறிந்திருக்கிறேன். உன் நடக்கையைப்பற்றியும் அக்கர்னல் மூலமாகச் கொஞ்சம் அறிந்து கொண்டிருப்பதால், அத்தகைய கேளிக்கைகளில் நீ மனமொத்துக்கலக்கமாட்டாயென்று அறிவேன். நீ நின்றிருந்த மாதிரியால் நீ இராணுவ உத்தியோகஸ்தனென்று தெரிந்து கொண்டேன். உன் தேக அளவால் வாலிபனென்று தெரிந்துகொண்டேன். அதற்கு மேல் நீ அக்கேளிக்கையில் கலவாமல் பிரத்தியேகமாக விருந்ததால் நீதான் காப்டன் உலகநாயகன் என்று தெரிந்துகொண்டேன்." என்றான்.

உலகநாயகன்:—"என்னுடை கர்னல் உங்களுக்குத் தெரியும் போல் காண்கிறது" என்றான்.

காப்டன் உத்தண்டி:—நான் கர்னல் குமரவேலைச் சில நாழிகையாகவே யறிவேன். ஆயினும் அவனைப்பற்றி நன்றாயறிந்துகொண்டேன். நீ கர்னல் இரகுநாதரின் புத்திரிமேல் காதல்கொண் டிருக்கிறாயென்று கர்னல் குமரவேல் கருதிக்கொண்டிருக்கிறான். அது நிஜமா பொய்யா என்று நான் உன்னைக்கேட்கவில்லை. உன் இரகசியத்தை யறிந்துகொள்ளவேண்டுமென்று நான் எண்ணங்கொள்ளவில்லை. நீ அவள் மேல் காதல்

கொண்டிருப்பினும் இல்லாவிடினும், ஒரு அக்கிரமஸ்தன் அவளுக்குச் செய்யக் கருதியிருக்கும் பெரிய சதிச் செயலிலிருந்தும் அவளைக் காப்பாற்றுவா யென்று நம்புகிறேன்'' என்றான்.

கர்னல் குமரவேலே அவளுக்குத் தீங்கு செய்யக் கருதுகிறான் என்று உலகநாயகன் மனதிற்பட்டது. அவன் "ஹா! எனக்குப் புலப்படுகிறது" என்றான்.

காப்டன் உத்தண்டி:—அவசரப்பட வேண்டாம். நீ எட்டிக் குடியிலுள்ள உன் பட்டாளத்தை விட்டு வெளிச் செல்லலாகாதென்று கட்டளை யிடப்பட்டிருப்பதும், மதனும்பாள் சீமாட்டியின் விருந்து அழைப்புச்சீட்டு அரசன் கட்டளையினும் உயர்வானதாய் மதிக்கப்பட்டிருப்பதாலேயே நீ இங்கு வருவதற்கு அனுமதி பெற்றாயென்பதும் எனக்குத் தெரிந்த விஷயங்களே. இப்போது உன் காலம் உன் வசத்திலிருக்கிறதா? உன் காலத்தை யுன் பிரியப்படி செலவழிக்கக்கூடுமா? அதை யறிய விரும்புகிறேன்'' என்றான்.

உலகநாயகன்.—"ஆம். அச்சீமாட்டி நாளைய நன்றைக்கு ஒரு விருந்தளிக்கிறபடியால் அதற்கும் எனக்கு அழைப்புச்சீட்டு வந்திருக்கிறது. அதனால்தான் நான் இன்னம் இங்கிருக்கிறேன்'' என்றான்.

உத்தண்டி "சரி, இனி நான் கூறவேண்டியதை யியம்புகிறேன் கேள். கர்னல் குமரவேல் எத்தகைய அக்கிரமத்திற்கும் அஞ்சாத பெரும் பாதகன் என்று நான் நன்றாய் அறிந்துகொண்டேன். அவன் நாளைக்கு அமராவதிக்கு ஒரு பெருந் தீங்கு செய்யக் கருதி யிருக்கிறான். அதாவது நாளைப் பிற்பகல் ஒரு கடிதம் அமராவதியிடம்

அளிக்கப்படும். அதில் நீ யவளை, ஒரு முக்கிய விஷயத்தைப் பற்றிக் கூறுவதற்காக, இரவு சரியாக ஒன்பதுமணிக்கு ஆற்றின் மேலுள்ள பாலத்திற்கு வரும்படி எழுதியதாக எழுதியிருக்கும். அக்கன்னிகை யதைக் கண்டதே கட்டாயம் வரலாகும். அப்போது கர்னல் குமரவேலால் அனுப்பப்பட்ட இரண்டு துஷ்டர்கள் பாலத்தினருகில் ஆயத்தமாகக் காத்துக்கொண்டிருந்து அவள் வந்த உடனே அவளைத் தூக்கிக்கொண்டு போவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நீ யதைத் தடுத்துவிடக் கூடிய வல்லமை யுடையவனென்று நான் அறிகிறேன். ஆனால் நீ தற்செயலாக அங்கு அச்சமயம் வந்ததாகத் தெரியவேண்டுமே யன்றி முன்னாடி யறிந்து வந்ததாகத் தெரியக்கூடாது. ஏனெனில் அப்படித் தெரிந்தால் அந்த அயோக்கியன் நான் அவன் இரகசியத்தை வெளியிட்டதாக இழிவாய்க் கூறுவான். இக்காலக் கொடுமையில் இந்த அக்கிரமச் சிந்தனையை வெளியிடுவது கூட இழிவான செயலாகக் கருதப்படும். என் தற்கால நிலைமைக்கு அது பிரதிகூலமாக விருக்கும். நீயாகத் தற்செயலாய் அத்துஷ்டர் வாக்காலேயே அறிந்து கொண்டாலன்றி, இது கர்னல் குமரவேலால் நடக்கிறதென்று நீ தெரிந்து கொண்டதாக இருக்கலாகாது. நான் கொஞ்சகாலத்திற்கு இத்தகைய கூட்டத்தில் கலந்து புழங்க வேண்டியதாக விருக்கிறது. இன்றேல் நான் இவ்வாறு கூறியிருக்க மாட்டேன்" என்றான்.

உலகநாயகன்:—"நான் உங்கள் அன்பிற்காக அளவுகடந்த நன்றி பாராட்டக் கடமைப்பட்டவனாக விருக்கிறேன். அப்படி யிருக்க உங்கள் வார்த்தைகளில் ஒன்றைக்கூட நான் அலட்சியம் செய்வேன் என்று தாங்கள் கருத வேண்டாம். எனக்கு மிக்க பேருதவி செய்த மன

600 008
186496

மொத்த நண்பராகவே நான் உண்மையாய்த் தங்களைக் கருதுகிறேன்.' 'என்றான்.

காப்டன் உத்தண்டி மனங் கசிந்து "உலக நாயகம்! நீ கூறுவது எனக்கு மிக்க சந்தோஷத்தை யளித்திருக்கிறது. ஆம்; உனக்கும் எனக்கும் மனமொத்த சினேகம் இருக்க வேண்டியதே. குமரவேல் என்னோடு பேசும் போது அவனுடைய அயோக்கிய நடக்கைகளால் நான் சந்தோஷ மடைவதாக அவன் கருதி யிருக்கிறான்." என்றான்.

உலகநாயகன்:—" நண்பரே! இச்சம்பவம் நேர்வதே தங்கள் நட்பு எனக்குக்கிடைத்ததற்குக் காரணமாதலால் இதற்காக இது நேர்வதற்கு நான் சந்தோஷ மடைகிறேன்.'' என்றபோது,

காப்டன்உத்தண்டி —"இன்னும் இதைப்பற்றி அதிகமாகக் கூறவேண்டாம். நீ சுகவிலாசத்தில் வசிப்பதாகக் கர்னல் குமரவேல் கூறினான். அது உண்மை தானே?" என்றான்.

உலகநாயகன்:—ஆம். சுகவிலாசம் என் அம்மான் மாளிகை. நான் ஒருவனே அவருக்கிருக்கும் சுற்றம்.

உத்தண்டி:—அப்படியாயின் அவரும் அவர் மனைவியும் உன்னைப் பெருமையோடு ஆதரித்து வருகிறார்கள் என்று நம்புகிறேன்.

உலகநாயகன்:—" என் அம்மான் மனைவி இறந்து பதினைந்து வருடங்களாயின." என்றான்.

இதைக்கேட்ட காப்டன் உத்தண்டி திடுக்கிட்டு "என்ன? இறந்து பதினைந்து வருடங்களாயினவா!" என்றான். அவன் முகத்தில் துக்கமும் வியப்பும் ஐயமுமான ஒருவித விகாரம் தோன்றியது. உலக நாயகன் அதைக்

கவனித்தான். ஆனால் உத்தண்டியின் முகக்குறிப்பு உடனே மாறிப் பழைய நிலையடைந்தது. அவன் வாலிபனை நோக்கி "அப்படியானால் நீ மிக்க சிறுவயதா யிருக்கையிலேயே பிறந்துவிட் டிருக்கவேண்டும். சரி நீ உன் வாசஸ்தலத் திற்குச் சென்று நான் கூறிய விஷயங்களைப்பற்றி சிந்திக்க ஆவலுடையவனு யிருப்பாய். நான் கூறிய யாவும் நினைவி லிருக்கட்டும். நான் இப்போது காமதேனு என்ற ஹோட் டலில் தங்கி யிருக்கிறேன். சீக்கிரம் வேறிடத்திற்குச் செல்ல ஏற்பாடு செய்திருக்கிறேன். அங்கு சென்றதும் அவ் விலாசத்தை யுனக்குத் தெரிவிக்கிறேன். நீ யவசியம் வந்து என்னைக் காண்பாயென்று நம்புகிறேன்" என்றான்.

காப்டன் உலகநாயகன் மிக்க நன்றி யறிதலோடு அவ னுக்கு மறுபடி வந்தனம் செய்து "நண்பரே! மிக்க உதார குணத்தோடு தாங்கள் செய்த பேருதவியை என் உயிருள்ள மட்டும் மறக்கவே மாட்டேன். தங்கள் நட்பு கிடைத்தது எனக்கு மிக்க கௌரவமும் பெரிய ஆஸ்தியும் கிடைத்த மாதிரியாக இருக்கிறது. கட்டாயம் தங்களை வந்து காண் பேன்." என்று அன்போடு கூறினான்.

சற்று நேரத்திற்குள் மனதொத்த நண்பர்களாகி விட்ட இவ்விருவரும் பிரிந்தபின், காப்டன் உத்தண்டி தான் தங்கியிருக்கும் ஹோட்டலை நோக்கிச் சென்றான். இச்சமயம் கர்னல் குமரவேல் ஏற்படுத்தி யிருக்கும் வேவா ளாகிய அப்பாசாமி காப்டன் உத்தண்டியின் பின் செல்ல வில்லை. கர்னல், அரியநாதம் பிரபுவைக் கண்டு பேசிய பின் வேலையாளை நோக்கி "நீ யினிக் காப்டன் உத்தண்டி யின் விஷயங்களைக் கவனிக்க வேண்டிய அவசியமில்லை. பழையபடி என்னிடம் வந்துவிடு" என்று கூறிவிட்டான்.

காப்டன் உத்தண்டி ஹோட்டலுக்குள் நுழையும்

போது சுமார் இரவு எட்டுமணி யிருக்கும். அவன் தன் அறைக்குள் சென்றதும் நாலைந்து போர்வீரர்கள் திடீ லென்று அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்களுக் குள் தலைவனாக விருந்த உத்தியோகஸ்தன் காப்டன் உதி தண்டியை நோக்கி "அரசன் ஆக்கினைப்படி உன்னைக் கைது செய்கிறோம்" என்றான். காப்டன் என்ன குற்றத்திற் காக என்றதற்கு "நீ மேற்கு நாட்டில் கலகம் செய்தவர் களின் சேனாதிபதியாகிய ஜெனரல் உக்கிர சேனன் என் பதற்காக" என்றான். அதைக்கேட்ட உக்கிர சேனன் சற்றேனும் மனங் கலங்காமல் சர்வ சாந்தத்தோடு "சரி, இங்கிருப்பதற்கு அங்கு செல்வதும் ஒரு நல்ல மாறுதலே" என்று அவர்களோடு சென்றான்.

* * * * * *

அதே இரவு மணி ஒன்பதிருக்கும். ஜகதாம்பாள் தன் அறையில் உட்கார்ந்து ஜனரல் உக்கிர சேனன் கொடுத்து விட்டுச் சென்ற கடிதங்களை ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். அப்போது தான் அரிய நாதம் பிரபு மேற்கு நாட்டில் செய்த அயோக்கிய காரியங்களும், அவன் நம்பிய நண்பர்களுக்குச் செய்த துரோகச் செயல்களும், முதலில் அரசனுக்குச் செய்த பெருஞ் சதியும் யாவும் அவளுக்குத் தெரியவந்தன. அவன்மேல் வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்கின்ற ஆவல் இப்போது அவளுக் கதிகமாய் விட்டது. அக்கடிதங்களை யெல்லாம் வாசித்துப் பார்த்தபோது, அவற்றில் அரியநாதம் பிரபுவின் கையொப் பம் இல்லாவிடினும், அவற்றில் எழுதி யிருக்கும் சங்கதி களால் அவை அவன் எழுதியவைகளென்று எப்படியும் விளங்கிவிடும். ஆகையால் இக்கடிதங்கள் தன்னிடம் சிக் கியதற்காக அவள் மிக்க சந்தோஷ மடைந்தாள்.

ஜகதாம்பாள் அக்கடிதங்களைப் பார்த்துக்கொண் டிருக்கையில் வீட்டுக்காரக் கிழவி வந்து உண்மையாகவே அன்புடையவள் போல் "அம்மா! நீ என் வீட்டிலிருப்ப தற்காக நான் மிக்க சந்தோஷ மடைகிறேன். உன் கெட்ட காலம் மாறிவிட்டது. நான் அதற்காக மனதாரச் சந் தோஷ மடைகிறேன். காலையில் கம்பீரமான ஒரு பெரிய மனிதன் வந்து உன்னைக்கண்டார். இப்போது அப்படிப் பட்டவர் இன்னொருவர் வந்திருக்கிறார்" என்றாள்.

ஜகதாம்பாள்:—"என்ன? என்னைக்காண இன்னொருவர் வந்திருக்கிறாரா?" என்றாள்.

மூதாட்டி:—"காலை வந்தவரைப் போலவே மிக்க நாணய மாக உடையணிந்தவர். தான் இந்நேரத்தில் வந்த தற்காக மன்னிக்கும்படி உன்னைக் கேட்டுக் கொள்வ தாகக் கூறச் சொன்னார். தான் மிக முக்கியமான ஒரு விஷயமாக வந்ததாகக் கூறினார். அதோடு காலை உன் னிடம் வந்து பேசினாரே, அவரிடமிருந்து வந்ததாகக் கூறச் சொன்னார்." என்றாள்.

ஜகதாம்பாள்:—"அப்படியாயின் அவரை யுள்ளே வரும் படி கூறு" என்றாள்.

நேயர்களே! வந்திருப்பவன் அநீதிக்கஞ்சாத துஷ்ட னாகிய கர்னல் குமரவேலே. மூதாட்டி சென்றதும் ஜக தாம்பாள் எதற்கும் எச்சரிக்கையாக இருப்போமென்று கருதித் தான் பார்த்துக்கொண்டிருந்த கடிதங்களையெல்லாம் எடுத்து மறைத்து வைத்துவிட்டாள். ஜனரல் உக்கிர சேனன் சென்றவுடனே, அவள் முதல் தனக்கு நல்ல ஒரு உடை வாங்குவதற்காகக் கடைவீதிக்குச் சென்றிருந்த தால் கர்னல் முன்பு அங்கு வந்து வீட்டுக்காரியிடம் பேசி

விட்டுச் சென்றது அவளுக்குத் தெரியாது. ஆகையால் அவள் ஏதேனும் சூது நடக்குமென்று நினைக்கக் காரணமே யில்லை.

கர்னல் குமரவேல் அறைக்குள் வந்ததும் "அம்மா! தாங்கள் தானே ஜகதாம்பாள் அம்மாள்?" என்றான்.

ஜகதாம்பாள்:—"ஆம் அய்யா! நான்றான் அந்த துரதிஷ்டம் பிடித்த மாது. தாங்கள் அந்த உதாரகுணமுள்ள உத்தமராகிய சேனதிபதியின் நண்பர் தானே?" என்றாள்.

வஞ்சகனுகிய கர்னல்:—"ஆம் அம்மா. நான் ஜனரல் உக்கிர சேனருடைய மனமொத்த நண்பன். அதனால் தான் அவர் இத்தகைய முக்கியமான இரகசிய விஷயத்திற்காக என்னை யனுப்பினர்" என்று அதிவினயத்தோடு கூறினன்.

ஜகதாம்பாள் "அய்யா! இதற்காக நான் அவருக்கு இன்னும் அதிக நன்றி பாராட்டக் கடமைப்பட் டிருக்கிறேன்" என்றாள்.

கர்னல் "அம்மா! அவருக்கு இராஜ சபையில் செல்வாக்கு இப்போதில்லை. சில சந்தர்ப்பங்களால் எனக்குக் கொஞ்சம் செல்வாக்கிருக்கிறது. ஆகையால் இவ்விஷயம் சீக்கிரமாய் நிறைவேறுவதற்காக என் உதவியை யேற்றுக் கொள்ளத் தீர்மானித்திருக்கிறர்" என்ற போது,

ஜகதாம்பாள்:—"ஆ! தங்கள் உதவிக்காகத் தங்களுக்கும் நான் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்" என்றாள்.

கர்னல்குமரவேல்:—அம்மா! தாங்கள் நேராய் அரசனிடம் அக்கடிதங்களைக் கொடுப்பதென்று அவர் முதலில்

ஏற்பாடு செய்தார். பிறகு என்னைக் கண்டு யாவும் கலந்து பேசியபின் அப்படிச் செய்வதால் ஆலசியம் நேரிடுமென்று அக்கடிதங்களை என் மூலமாக அரசரிடம் சேர்ப்பிக்க வேண்டுமென்று தீர்மானித்தார். அவரே என்னோடுகூட வந்து என்னை யுமக்கு அறிமுகமாக்கி வைப்பதென்றே கருதினார். ஆனால் திடீலென்று அவர் ஒரு நண்பரோடுகூட ஒரு விஷயத்திற்காகச் செல்லவேண்டி யிருந்தது. இப்போது தாங்கள் அக்கடிதங்களை யென் வசத்தில் ஒப்பிவித்தால் நான் கூடிய சீக்கிரத்தில் அவற்றை யரசரிடம் சேர்ப்பிப்பேன். அம்மனிதன் இருக்கிறானே—அவன் பெயரைக் கேட்கவும் உனக்கு வெறுப்பாகவே யிருக்கும்—அந்த அரியநாதம் பிரபுவின்மேல் வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் விஷயத்தில் உதவி செய்ய எனக்குச் சமயம் வாய்ந்ததற்காக நான் மிக்க சந்தோஷமடைகிறேன். அதற்கே பாதி நான் இது விஷயத்தில் என் நண்பராகிய ஜனரல் உக்கிர சேனருக்கு உதவி செய்ய ஒப்பிக் கொண்டேன்" என்றான்.

இவை யாவும் கேட்ட ஜகதாம்பாள் எப்படி இவனை நம்பாமற் போவாள்? பூரணமாக நம்பிக்கை கொண்டு அக்கடிதங்களை யெடுத்து அவனிடம் அளித்து விட்டேயிருப்பாள். ஆனால் அச்சமயம் திடீலென்று அவள் மனதில் ஒரு யோசனை தோன்றியது, அதாவது "இத்தகைய இரகசியமான விஷயத்திற்காக நமக்கு அறிமுகமில்லாத ஒரு புது மனிதனை நம்மிடம் அனுப்பும் ஜனரல் உக்கிர சேனர் ஒரு சீட்டுக் கொடுத்தனுப்பலாகாதா? ஏதேனும் ஒரு அடையாளம் அனுப்பலாகாதா? ஒன்றுமில்லாமல் ஒரு புது மனிதனுடைய வாய்ப்பேச்சை நாம் நம்பி அக்கடிதங்களை

யவனிடம் கொடுத்து விடுவோமென்று அவர் எப்படிக் கரு திவிடலாம். மேலும் அக்கடிதங்கள் நம்முடையவை யல் லவே. அவற்றை யவர் நமது உபயோகத்திற்காக நம்மிட மளித்தார். நாம் எப்படி யவர் அனுமதியைப் பெறுமல் ஒரு வன் வாய்ப் பேச்சை நம்பி யவற்றை யவனிட மளித்து விடுவது? அவர் உலக அனுபோகமுடையவர். நாம் எச் சரிக்கையாக இருந்ததற்காகச் சந்தோஷ மடைவாரே யன் றிக் கோபிக்கமாட்டார். மேலும் இப்போது இரவு கிட்டத் தட்டப் பத்துமணி யாகப்போகிறது. இனிமேல் இம்மனி தன் அரசனைக் காணமுடியாது. எப்படியும் நாளைக்குத் தான் இவ்வேலை நடக்கவேண்டும். ஆகையால் நாம் அக் கடிதங்களைக் காலை வரை கொடுக்காமல் தாமதிப்பதினுல் காரியம் கெட்டுப்போகாது. எதற்கும் அவசரப்படாமல் ஆலோசித்து நடப்பதே நல்லது'' என்று தனக்குள் சிந் தித்துக்கொண்டு, கர்னலை நோக்கி,

"அய்யா! தங்கள் உதார குணத்திற்காக மறுபடி தங் களுக்கு வந்தன மளிக்கிறேன். தாங்கள் எப்போது இக் கடிதங்களை யரசரிடம் சேர்ப்பிப்பீர்கள்?" என்ருள். கர் னல் "கட்டாயம் நாளை மாலைக்குள் அவை அரசரிடம் சேர் ந்து அத்துஷ்டப் பிரபுவின் தண்டனை தொடங்கி விடும்'' என்று சந்தோஷத்தோடு கூறினுன்.

ஜகதாம்பாள் "தங்கள் சிரமத்திற்காக மிக்க வந்த னம். அவ்வாறே அக்கடிதங்களை நாளைக் காலை தங்களிட மேனும் அல்லது தாங்களனுப்பும் யாரிடமேனும் கொடு த்து விடுகிறேன்'' என்ருள்.

அதைக்கேட்டதே கர்னல் மனவாட்ட முற்ருன். ஆனல் அதை யடக்கிக்கொண்டு "தாங்கள் அக்கடிதங்களை யிப்போதே யென்னிடமளிப்பது நலம். ஏனெனில் நாளைக்

காலை எனக்குப் பல வேலைகள் இருக்கின்றன. அதனால் ஆலசியம் நேரிட்டு விடக்கூடும்'' என்றான்.

ஜகதாம்பாள்:—தாங்கள் இப்படிக் கூறுவதற்காக அவசியம் உடனே தங்களிடம் கொடுத்துவிடுவேன். ஆனால் நான் அவற்றை நாளைக் காலைக்கு முன் கொடுக்க முடியாது. ஏனெனில் அவை முக்கியமான கடிதங்கள். இதுவோ அயோக்கியர்கள் வசிக்கும் பிரதேசம். கள்ளர்கள் முதலிய கொலை பாதகர்கள் வசிக்குமிடம். இப்படிப்பட்ட விடத்தில் அக்கடிதங்களை வைத்திருக்கப் பயந்துகொண்டு ஒரு கட்டாக அவைகளைக்கட்டி அரக்கு முத்திரை போட்டு எனக்கு அறிமுகமான ஒரு வர்த்தகரிடம் கொடுத்து வைத்திருக்கிறேன். நாளைக்காலை அவைகளை வாங்கி வைத்திருந்து தங்களிடம் அளித்து விடுகிறேன். அவர் ஒரு சிறு சீட்டாகிலும் கொடுத்திருக்கலாம்.'' என்றாள்.

கர்னல்,—"அம்மா! எவ்வளவு ஜாக்கிரதையாகத் தான் நடந்து கொள்வதாயினும், அவர் கைப்படக் கடிதம் எழுதியனுப்புவது ஆபத்துக்கிடமாகும். அதை யோசித்தே யப்படிச் செய்யவில்லை. தங்கள் திருப்திக்கு வேறேதேனும் ஒரு அடையாளங் கூறினால் அத்தகைய அடையாளத்தை வாங்கி வருகிறேன்'' என்றான்.

ஜகதாம்பாள்:—"தங்களை யவ்வாறு அடையாளம் வாங்கி வரும்படி கேட்பது எனக்கே வெட்கமாக விருக்கிறது. தங்கள் பிரியப்படி ஏதோ ஒரு அடையாளம் வாங்கி வந்தால் போதும்'' என்றாள்.

கர்னல்:—"தாங்கள் அவர் அணிந்திருக்கும் மோதிரங்கள் முதலிய ஏதேனுமொன்றை நன்றாய்க் கவனித்திருக்

கிறீர்களா! அப்பட்டிப்பட்டது ஏதாவது கூறினல் அதை வாங்கி வருகிறேன். நீங்கள் எச்சரிக்கையாக அப்படிக் கேட்பது நல்லதே" என்ருன்.

ஜகதாம்பாள்:—"ஆ இப்போது நினைவிற்கு வந்தது. அவர் நடுவிரவில் ஒரு ஒற்றைவைரம் பதிக்கப்பட்டிருந்த மோதிரம் அணிந்திருந்தார். அது மிக்க ஜொலிப்போடு பிரகாசித்துக்கொண் டிருந்தது" என்ருள்.

கர்னல்:—"சரி அவர் ஒரு கடிதம் கொடா விட்டால் அந்த மோதிரத்தை வாங்கி வருகிறேன்" என்று கூறி விட்டு அங்கிருந்து புறப்பட்டான். அவன் மாடியை விட்டிறங்கியபோது வாயிற்படி யண்டை வீட்டுக் காரியைச் சந்தித்து அவளிடம் இரகசியமாகச் சில வார்த்தைகளைக்கூறி அவள் கரத்திலும் மூன்று ரூபாய் களை வைத்து விட்டுச்சென்ருன்.

கடைசியில் அத்துஷ்டனுகிய நயவஞ்சகன் பேசிய தந்திரத்தால் சூதறியாத ஜகதாம்பாள் "அடடா! நாம் அனுவசியமாக இவன்மேல் சந்தேகம் கொண்டு விட்டோம். பேசாமல் இவனிடமே கடிதங்களைக் கொடுத்துவிட் டிராமற் போனேமே" என்று சிந்தித்தாள். அப்போது கூட கொடுத்து விட்டேயிருப்பாள். அப்படிச் செய்தால் ஒரு வர்த்தகனிடம் கொடுத்து வைத்திருக்கிறேன் என்று கூறியது பொய்யென்று விளங்கிவிடு மென்றஞ்சினுள்.

16-வது அத்தியாயம்.

கர்னல் குமரவேல் மறுபடி அரியநாதம் பிரபுவைக் காணல்—பின்னும் சதியாலோசனைகள்.

கர்னல் குமரவேல் ஜகதாம்பாள் வீட்டை விட்டுப் புறப்பட்டு வீதியின் கோடியில் சென்றபோது தன்

வேலைக்காரனாகிய அப்பாசாமி குதிரையோடு நின்றிருப்பதைக்கண்டான். அந்தப் பிரதேசத்தில் எதற்கு மஞ்சாத கொலை பாதகர்களும், கள்ளர்களும், பரமதுஷ்டர்களும் வசிப்பதால் எப்படிப்பட்டவர்களுக்கும் இரவு எட்டு மணிக்குமேல் அந்தப் பக்கம் செல்வதாயின் நடுக்கமே. ஆகையால் கர்னல் துணைக்காகவே அப்பாசாமி யங்கு வந்திருக்கும்படி கூறினான்.

கர்னல் அங்கிருந்து தன் வாசஸ்தலத்திற்குச் செல்லாமல் நகரத்தின் மேற்குப் பாகத்திலிருக்கும் அரியநாதம் பிரபுவின் மாளிகைக்குச்சென்றான். பிரபு மிக்க ஆவலோடு கர்னலின் வரவிற்காக எதிர் பார்த்துக்கொண் டிருந்தார். ஆனால் கர்னலின் முகத்தைக்கண்டதே அவன் சென்ற காரியம் அனுகூலப்படவில்லையென்று அறிந்துகொண்டு "என்ன சமாசாரம்?" என்று வினவினர்.

கர்னல் நடந்த சங்கதிகள் யாவும் கூறியபின், "பிரபுவே! நான் ஜகதாம்பாளின் அறைக்குள் செல்லும் முன்பு அவள் அத்தகைய கடிதங்களை வாசித்துக்கொண்டிருந்தாளாவென்று வீட்டுக்காரியைக்கேட்டேன். அதற்கவள் " இப்போது அவள் மேஜைமேல் சில கடிதங்களை வைத்து வாசித்துக்கொண்டிருக்கிறாள் " என்று மொழிந்தாள். ஆகையால் நான் உள்ளே செல்வதற்குள் அவள் அவற்றை யெங்கோ மறைத்துவைத்துவிட்டு எனக்கு அம்மாதிரி தான் அவற்றை யொரு வர்த்தகனிடம் கொடுத்து வைத்திருப்பதாகப் பொய் கூறிவிட்டாள் " என்றான்.

பிரபு:—எப்படியோ உன்மேல் அவளுக்குச் சந்தேகம் உண்டாய்விட் டிருக்கிறதாகத் தெரிகிறது. இனியவள் அவற்றை யுன்னிடம் அளிக்கமாட்டாள்.

கர்னல் குமரவேல்:—" பிரபுவே! அப்படியில்லை என்று எனக்கு நன்ருய்த் தெரிகிறது. அவள் எதற்கும் எச்சரிக்கையாக நடப்பது நலமென்றெண்ணியே யப்படிச் செய்தாளன்றிச் சந்தேகம் ஒன்றும் உண்டாகவில்லை. ஜெனரல் உக்கிரசேனன் சிறையாக்கப்பட்ட சங்கதி யின்னும் அவளுக் கெட்டவில்லை. காலை யச் சங்கதி யவளுக் கெட்டு முன் அக்கடிதங்களை வாங்கி வந்து விடுவேன். அச்சங்கதி யெட்டினுலும் எட்டட்டும். அவசியமில்லை. எப்படியாயினும் அக்கடிதங்களை நான் கொண்டுவந்து விடுகிறேன். அதற்கு வேருெரு நிச்சயமான வழியுமிருக்கிறது.

பிரபு:—என்ன வழி ?

கர்னல்:—என்னிடம் தகுதியான மிக்க சாமார்த்திய முடைய இரண்டு ஆசாமிகளிருக்கிருர்களென்று கூறி யிருக்கிறேனல்லவா ? நாளை இரவு அவர்களை யனுப்பினுல் கட்டாயம் அக்கடிதங்களைக் கொண்டுவந்து விடுவார்கள்.

பிரபு:—கர்னல்! அது மிக்க அபாயகரமான வேலை. கடைசியில் அதனுல் நமது முயற்சிகளனைத்தும் கெட்டுப் போவதோடு ஆபத்தாகவும் முடியும். நான் சொல்லுகிறேன் பாரும். ஜகதாம்பாள் அந்தவிடம் துஷ்டர்களிருக்கிற விடமாதலின் அதற்குப்பயந்து அக்கடிதங்களைத் தான் ஒரு வர்த்தகனிடம் பாது காப்பதற்காக வைத்திருப்பதாகக் கூறினுளல்லவா. நீர் வந்துவிட்டவுடனே அவள் கட்டாயம் அந்தப்படி உண்மையாகவே செய்துவிட் டிருப்பாள்.

கர்னல்:—" அப்படியானுல் அந்த மோதிரத்தைத்தான் கைப்பற்றவேண்டும். அதை யெப்படிக் கைப் பற்று

வது. அவன் இராஜாங்கச் சிறையாதலின் தன்னிடமுள்ள நகைகள் பணம் முதலியவைகளை யவன் வைத்துக்கொண்டிருக்கலாம்" என்றான்.

பிரபு:—அவனுடைய மோதிரத்தைக் கொண்டு வருவதில் கஷ்ட மிருப்பதை யறிவேன். ஆயினும் ஒரு கை பார்க்கவேண்டியதே. எனக்கு ஒருயோசனை தோன்றி யிருக்கிறது. நான் பொழுது விடிந்ததே சிறைச் சாலைக்குச் செல்கிறேன். நீர் காலை ஒன்பது மணிக்குச் சிறைச்சாலையினருகில் ஆயத்தமாக இருக்கவேண்டும். நான் மோதிரத்தை யளித்ததும் ஆலசியமின்றி ஜகதாம்பாளிடம் செல்லவேண்டும்'' என்றார்.

கர்னல் அவ்வாறே ஒன்பது மணிக்கு வந்து ஆயத்தமாக விருப்பதாகக் கூறிவிட்டு விடைபெற்றுச்சென்றான்.

* * * * * * *

இலவணபுரிக்கோட்டையிலுள்ள சிறைச்சாலை, சிறைச்சாலைகளில் மிக்க பிரசித்திபெற்றது. அது ஒரு கட்டிடமல்ல. மிக்க பலமான பல கட்டிடங்கள் அடங்கியது. அவற்றில் ஒன்றில் முதல் அடுக்கு மாடியிலுள்ள ஒரு அறையில் நமது ஜனரல் உக்கிரசேனர் சிறை வைக்கப்பட்டிருக்கிறார். அவர் கால் கைகளில் பலமான விலங்குகள் பூட்டப்பட்டிருக்கின்றன. அவை அவர்மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ளவேண்டுமென்று பூட்டப்பட்டவைகளே யன்றிப் பாதுகாப்பிற்கல்ல. அந்த அறையின் சுவர்கள் இரும்பு போன்ற பலமானவை. சாளரமும் அத்தகையதே. எப்படிப்பட்ட சூரனாயினும் தன் பலத்தால் அதிலிருந்து தப்பித்துக்கொண்டுபோகலாமென்று கருதவேமாட்டான். அதற்கு முன் ஒரு அறையிருக்கிறது. அந்த அறையில் ஜனரல் உக்கிரசேனருக்கென்று பிரத்தியேகமாக ஏற்படுத்தப்பட்ட காவலன் இருக்கிறான்.

அக்காவலனுக்கு வயது சுமார் ஐம்பத்தைந்திற்கு அதிகமேயிருக்கும். அவன் சின்னக் கட்சியரசன் சைனியத்தில் போர் வீரனாகவிருந்தவன். அவன் கலியாணம் செய்துகொள்ளவேயில்லை. தயவு, இரக்கம், அன்பு முதலிய குணங்கள் அவனிடம் எள்ளளவுமில்லை. இராணுவச் சட்டத்தின்படி மிக்க கண்டிப்பாக நடப்பவன். சிறைச் சாலையில் ஒரு காவலனாயிருப்பினும் ஒருவருக்கேனும் சொல்ப உதவியேனும் செய்து ஒரு காசேனும் பெற்றவனல்ல. தன் அதிகாரிகள் கட்டளையே அவனுக்கு வேதவாக்கியம். வேணுமென்றே அப்படிப்பட்டவனை ஜனரல் உக்கிரசேனருக்குக் காவலாக வைத்தார்கள்.

உக்கிரசேனர் சிறை செய்யப்பட்ட மறுநாள் காலை எட்டு மணியிருக்கும். அப்போது அவர் அறையின் கதவு திறக்கப்பட்டதும் காவலன் காலைப் போசனத்திற்காக ரொட்டியும் ஜலமும் கொண்டு வந்து அங்குள்ள மேஜை மேல் வைத்தான். அவர்கள் ஆசாரப்படி அந்த அறையில் ஒரு மேஜையும் ஒரு நாற்காலியும் போடப்பட்டிருந்தன. ஒரு பாத்திரத்தில் ஜலம் வைக்கப்பட்டிருந்தது. ஒரு மஞ்சம் போடப்பட்டு அதன் மேல் வைக்கோல் பரப்பி ஒரு பாய் விரிக்கப்பட்டிருந்தது. ஜனரல் உக்கிரசேனர் காவலனை நோக்கி "இந்த அற்ப ஆகாரந்தானா எனக்குக்கொடுப்பது?" என்று கேட்டார்.

காவலன்:—எனக்குக் கட்டளையிட்டபடி நான் செய்தேன்.

ஜனரல் உக்கிரசேனர்:—நான் உன்னிடம் ஒரு சவரனைக் கொடுத்து எனக்கு நல்ல ஆகாரங்களையும் ஒரு புட்டி ஒயினும் வாங்கி வந்து கொடுத்து மிச்சமாயிருக்கும் காசையுன்னையெடுத்துக்கொள்ளும்படி கூறினாலென்ன?

காவலன்:—நான் அப்படிப்பட்ட வேலைகள் ஒன்றும் செய்ய மாட்டேன். உனக்குச்சாதாரண ஜலபானமே போதுமானது.

ஜனரல் காவலனோடு பேசிக்கொண்டே அவனை யேற இறங்க நன்றாய் உற்று நோக்கினார். முதலில் தான் எப்போதோ நன்றாக அறிந்திருந்த உருவம் போல் தோன்றியது. அதன்மேல் நன்றாகச் சிந்தித்துக்கொண்டே நோக்கினார். சட்டென்று அவர் மனதில் ஒருவிதச் சந்தோஷம் தோன்றியது. உடனே காவலன் தனக்கு ஜலபானமே போது மென்றதை நினைத்து "ஏன் எனக்கு ஜலமே போது மென்று கூறினை?" என்றார்.

காவலன்:—"கூறவேண்டுமாயின் கூறுகிறேன். உனக்கு புத்திசபலித்திருக்கிற தென்று கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் பைத்திய முள்ளோர்க்கு மயக்க வஸ்துக்களை யளித்தால் பைத்தியம் இன்னும் அதிகமாகும்." என்றான்.

இதைக்கேட்டதே ஜனரல் இப்படிக் கூறப்பட்டதன் காரணம் இன்னதென்று அறிந்து கொண்டார். உடனே தமக்கு வந்த கோபத்தை யடக்கிக்கொண்டு "ஆ! அப்படியா கூறினார்கள்" என்று எழுந்து நிமிர்ந்து நின்று, "இப்போது என்னை நன்றாக உற்று நோக்கு, என் முகத்தையும் என் கண்களின் பார்வையையும் நன்றாய்ப்பார்" என்றார். காவலன் அவ்வாறே நோக்கத்தொடங்கினன். ஜனரலும் அவனை யுற்று நோக்கினார். அப்போது தாம் முன்பு கொண்ட சந்தேகம் உண்மையே யென்றும் தாம் நெடுநாட்களுக்கு முன் கண்ட அம்மனிதனே இவன் என்றும் புலப்பட்டது. ஆனால் காவலன் தன்னைக் கொஞ்ச மேனும் தெரிந்து கொண்டதாக அவருக்குத் தோன்றவில்லை.

சற்று நேரம் இருவரும் ஒருவரை யொருவர் உற்று நோக்கிய பின் ஜனரல் "இப்போது நான் பைத்தியக்கார னென்று உனக்குப்புலப்படுகிறதா கூறு" என்றார். காவலன் "எனக்குத் தெரியவில்லை. நான் இந்த விஷயத்தில் தேர்ச்சி யுடையவனல்ல" என்றான்.

ஜனரல்:—இருக்கட்டும் நான் ஒன்றேகால் பைத்தியம் பிடித்தவனாகவே இருக்கட்டும். அதைப்பற்றி யவசி யமே யில்லை. ஆயினும் இப் பைத்தியத்திலும் உன் விஷயங்களைப் பற்றிக் கொஞ்சம் சங்கதி எனக்குத் தெரியும்.

காவலன்:—இருந்தால் என்ன ? என் பெயர் கூட உனக்குத் தெரியாதென்று நான் நன்றாக அறிவேன். மற்ற சங்கதிகள் ஒருபக்க மிருக்கட்டும்.

ஜனரல்:—உன் பெயர் கிரிநாதன்.

காவலன்:—அதனாலென்ன ? சிறைச்சாலை அதிகாரி உன்னை யிங்கழைத்து வந்த போது உன்காவலன் கிரிநாதன் என்று கூறியிருக்கலாம்.

ஜனரல்:—இருக்கட்டும். ஆனால் அவர் அப்படி யொன் றும் கூறவே யில்லை. அப்படிக்கூறி யிருந்தாலும் உனக்கு ஒரு சகோதரன் இருக்கிறான் என்று கூடச் சொல்லி யிருப்பாரோ?

காவலன்:—அதற்கென்ன உலகில் அனேகர்க்குச்சகோதரர் இருக்கிறார்கள். இதை யாரும் உத்தேசித்துக்கொள் ளலாம்.

ஜனரல்:—அப்படியா ? உத்தேசித்துக் கொள்ளலாமோ? உத்தேசத்தால் உன் தம்பியின் பெயர் இலக்ஷ்மணன் என்று கூடக் கூறலாகுமோ ?

காவலன்:—ஓ! எப்படியோ நீ என்னைப்பற்றிய இச்சங்கதிகளை யெல்லாம் தற்செயலாகக் கேள்விப்பட்டிருக்கலாகும்.

ஜனரல்:—"சற்று என்னருகில்வா இப்போது நான் கூறப்போகும் இரகசிய சங்கதி கூட தற்செயலாகக்கேள்விப்பட்டிருக்கலாகுமோ என்று நினைத்துப்பார்" என்றார்.

காவலன் இவன் ஒரு சமயம் நம்மைப்பிடித்தடித்துவிட்டு ஓடி விடப்போகிறானென்று பயந்து கொண்டு ஜாக்கிரதை யோடு அவரருகிற் சென்று குனிந்தான். அவன் கருத்தினை யறிந்த ஜனரல் உக்கிர சேனர் புன்னகையோடு அவன் செவிகளில் சிலவார்த்தைகளைக் கூறினார். காவலனாகிய கிரிநாதன் அதைக்கேட்டதும் திடுக்கிட்டு நான்கைந்தடிகள் பின்னிடைந்து ஜனரலை மிரளமிரள உற்று நோக்கிக்கொண்டே "அப்படியானால் நீயார்? நீயார்?" என்றான்.

ஜனரல் புன்னகை புரிந்து கொண்டே "நான் யார்? நான் ஜனரல் உக்கிரசேனன். மேற்கு நாட்டுக்கலகத்தலைவன். இது முன்னமே தெரிந்த சங்கதிதானே. சரி இப்போதும் நான் பைத்தியக்காரன் என்று கருதுகிறாயா?" என்றான்.

மிக்க வியப்படைந்த கிரிநாதன் "நீ இந்திர ஜாலங் கற்றவன் என்று நான கருதுகிறேன். ஆயினும் இதைப் பற்றி இன்னும் பேசுவதில் ஒரு பயனுமில்லை" என்றான்.

ஜனரல்:—அப்படி யல்ல. நாம் பேசுவதால் மிக்க பயனுண்டாகும் என்பது உண்மை. இதோ பார் நீ முன் இருந்தது போல் இல்லை. இப்போது மிக்க கண்டிதக் காரனும் கன்மன முடையவனாகவும் மாறி விட்டிருக்

கிறாய். உன் உண்மைக் குணத்தைக் கூறுவதால் கோபிக்கலாகாது. பஞ்சநாதம் பிரபுவின் மாளிகை யாகிய சுகவிலாசத்தில் வேலையாளாக விருக்கும் உன் தம்பி இலட்சுமணன் உன்போன்றிரான் என்றே நம்பு கிறேன். அதிருக்கட்டும். இப்போது உன் மன தில் ஒருவித உணர்ச்சியும் என் விஷயத்தில் கொஞ் சம் ஆவலும் உண்டாக்கி யிருக்கிறேன். அது வீண் போகாது. ஏனெனில் மனித சுபாவம் அத்தகையது.

காவலன்:—இவ்வளவு பேசுவதும் எதற்காக?

ஜனரல்:—நீ எனக்கு ஒரு சொல்ப உதவிசெய்ய வேண் டும்.

காவலன்:—நான் செய்யக்கூடிய உதவி யெல்லாங் கூடி உனக்கொரு மாறுவேட உடையளித்து இரவில் கத வைத்திறந்து உன்னை ஓடிப்போய் விடும்படி விட்டுவது தான். அந்த உதவி நான் ஒருபோதும் செய்யவே மாட்டேன்.

ஜனரல்:—நான்உன்னை யத்தகைய உதவி செய்யும்படி யொருபோதும் கேட்கவே மாட்டேன். நான் கோழை யல்ல. நீ எனக்குச் செய்யவேண்டிய உதவி எது வெனில் நான் எழுதிக்கொடுக்கும் சிறு கடிதத்தைக் கொண்டுபோய் நான் கூறும் ஆசாமியிடம் அளித்து விடவேண்டியதே.

காவலன்.—உன்னிடமிருந்து எத்தகைய கடிதமாவது சமாசாரமாவது வெளியில் ஒருவருக்கும் கொண்டு போகக்கூடா தென்றும், வெளியிலிருந்து எதையும் உன்னிடம் கொண்டுவரக் தளிக்கக்கூடா தென்றும் கண்டிப்பாகக் கட்டளையிடப்பட்டிருக்கிறது. அதோடு நான் காவலை விட்டு எப்படி வெளியில் செல்லலாம்.

ஜனரல்:—என் ஜேபியில் கையிட்டு அதிலிருக்கும் சவரன்களில் பாதியை இப்போது எடுத்துக் கொள்ளும் போது இச்சட்டங்களை யெல்லாம் அவ்வளவு கண்டிப் பாய்க்கவனிக்கலாகுமோ? மேலும் காவலை விட்டுப் போவதற்கு நீ சற்றும் பயப்பட வேண்டியதில்லை. நீ வெளிப்பக்கம் கதவைப் பூட்டிக்கொண்டு மூன்று நான்கு மணி நேரம் வேண்டுமாயினும் சுகமாய் அச்சமின்றி வெளியில் சென்றிருக்கலாம். நான் கூச்சலிட்டு என் காவலன் என்னைத்தனியே விட்டு விட்டு எங்கோ போய் விட்டான் என்று கூறப்போகிறதில்லை. ஓடிவிட முயற்சி செய்யப்போவது மில்லை.'' என்ருர்.

காவலன்:—நீ எப்படிப்பட்ட ஆச்சரிய மனிதனுக விருக்கிருய். நான் இதுவரையில் யாரிடமும் இவ்வளவுநேரம் பேசியதே யில்லை. நான் எப்போதும் இரண்டொரு வார்த்தைகளே பேசுவது.'' என்ருர்.

ஜனரல்:—''உண்மையே, என்னிடம் உனக்குக் கொஞ்சம் விசுவாசம் உண்டாய்விட் டிருக்கிறது. அதனுல் இந்நேரம் பேசினுய். இது மனித சுபாவமே. மேலும் இப்போது இடைவிடாப் பழக்கத்தால் உன் மனம் கடின மடைந்த போதிலும் உன் இயற்கையான மிருது குணம் அடியோடு போய்விடவில்லை யென்பது உண்மை. இனித்தாராளமாகஎன் சேபியில் கையிட்டு அதிலுள்ள பணத்தில் அரைப்பாகம் எடுத்துக்கொள். வேண்டாம், உனக்கு அவ்வளவு கஷ்டம் வேண்டாம்; நானே யெடுக்கிறேன்'' என்று எடுத்துக் குவியலாகச் சவரன்களை மேஜை மேல் வைத்தார்.

காவலன் மிக்க வியப்படைந்தான். ஆசை யொரு பக்கம் தூண்டுகிறது. ஆயினும் கொஞ்சம் சமாளித்துக்

கொண்டு "இது எனக்கு வேண்டாம்; எனக்கு ஆகாரத்திற்கும் உடைக்கும் மற்றவற்றிற்கும் போதுமானது கிடைக்கிறது" என்றான்.

ஜனரல்:—ஆம். உண்மையே. உன் ஆயுள் வரையில் இந்தச் சிறைச்சாலையில் காவலனாகவே உலைத்துக் கொண்டு ஒருவனுடைய சேவகனாக இருந்துகொண் டிருப்பதனால் நீ கூறுகிறபடி போதுந்தான். நான் அப்படி நினைக்கவில்லை. நகர வோரத்தில் எங்கேனும் சுகமான விடத்தில் சுற்றிலும் அழகிய ஒரு சிறு தோட்டத்தை யுடைய சிறு வீட்டை வாங்கிக்கொண்டு பிற்காலத்தை யேனும் சுகமாகக் கழிக்கக் கருதி யிருப்பாய் என்று நினைக்கிறேன்.

இம்மொழிகளைக் கேட்டதே கிரிநாதனுக்கு ஒருவிதப் புது உணர்ச்சி தோன்றியது. ஆம்; நாம் அப்படி யிருந்தால் சுகமாகக் காலங் கழிக்கலாம் என்று அவன் மனதிற்குப் புலப்பட்டது. அவன் ஜனரலை நோக்கி,

"அடடா! நீ மிக்க அற்புதமான மனிதனாக விருக்கிறாய். என்றும் என் மனதில் தோன்றியிராத ஒரு புது எண்ணத்தையும் ஆசையையும் உண்டாக்கிவிட்டாய்" என்றான்.

ஜனரல்:—ஆம்; உன் மனதில் தோன்றிய அந்த எண்ணம் இனி யுன்மனதைவிட்டு நீங்காது. அது அங்கேயே வேரூன்றிக் கடைசியில் பலனை யளிக்கும். உன் சொந்தத் தோட்டத்தில் சந்தோஷமாகப் பழவர்க்கங்களையும், காய்கறி பதார்த்த வகைகளையும் பயிரிட்டுக் கொண்டு, உன் சொந்தப் பசுவின் பாலை யருந்திக் கொண்டு சுகமாக வாழப்போகிறாய். இன்னமும் ஆலசியம் செய்யாமல் பணத்தை எடுத்துக்கொள்" என்றார்.

காவலன் சற்றுநேரம் நிதானித்தான். ஆனால் தன் மனப்போக்கைத் தடைசெய்ய அவனால் முடியவில்லை. உடனே தட்டென்று பணத்தை யெடுத்துக்கொண்டு "அப்புறம் என்ன ?" என்றான்.

ஜனரல் :—"ஒரு கடிதம், பேனா, மசி கொண்டுவா" என்றான்.

காவலன் உடனே சென்று அவைகளைக் கொண்டு வந்து கொடுத்தான். ஜனரல் ஒரு கடிதத்தில் நான்கைந்து வரிகளை யெழுதி மடித்து அரக்கு முத்திரையிட்டு அதைக் காவலனிடமளித்து "இதைக் கொண்டுபோய் அரசன் அரண்மனையிலிருக்கும் மதனாம்பாள் சீமாட்டியிடம் அளிக்கவேண்டும்" என்றான்.

இதைக்கேட்ட காவலன் திடுக்கிட்டு "அய்யோ மதனாம்பாள் சீமாட்டியிடமா தரவேண்டும்? அச்சீமாட்டி அதற்காகக் கோபித்துக்கொண்டால் என் தொழிலுக்கே ஊனம் வருமே" என்றான்.

ஜனரல் :—அப்படி யொன்றும் வராது. அதற்கு மாறாக அவளிடமிருந்து இரண்டு மூன்று பொற்சவரன்களேனும் பரிசாகப் பெற்றுவர நேரிடும். உன்மேல் கோபம் கொள்வதற்குப் பதிலாக இக் கடிதத்தைத் தன்னிடம் அளித்ததற்கு உன்மேல் சந்தோஷமே யடைவாள். பின்னால் நான் கூறியபடி நீ உன் சிறு வீட்டில் சந்தோஷமாக வாழும்போது இன்று நடக்கும் சங்கதிகளை நினைத்துக்கொள். நீ யிக்கடிதத்தை யச்சீமாட்டியிட மளித்ததும் இல்லாததும் இன்றிரவு ஒன்பது மணிக்கு எனக்குத் தெரிந்துவிடும். கொடுத்துவிட்டிருந்தால், என்னிடமிருக்கும் மிச்சம் பணம் உன்னுடையதே. அதோடு, என்னிடமிருக்கும் மோதி

ரங்களில் உனக்குப் பிரியமானதொன்றையும் எடுத்துக்கொள்ளலாகும். நீ இதைச் செய்யாவிட்டாலோ நான் உன் செவியிற் கூறிய அந்த இரகசிய விஷயமிருக்கிறதே அதை யதிகாரிகளுக்கு அறிவித்து விடுவேன் " என்றார்.

காவலன் :—நீர் என்னைப் பயமுறுத்தவேண்டாம். நீர் கூறியபடி நான் கட்டாயம் செய்வேன். மோதிரவிஷயமிருக்கிறதே, அதோ தங்கள் நடுவிரலிலிருக்கும் வைர மோதிரமிருக்கிறதே அதையே நான் விரும்புகிறேன் " என்றான்.

ஜனரல் :—" அப்படியாயின் இதோ இப்போதே இதையெடுத்துக்கொள் " என்று அம்மோதிரத்தைக் கழற்றிக் காவலனிடம் அளித்துவிட்டார். அதன்மேல் கிரிநாதன் தான் அவசியம் கடிதத்தைக் கொண்டுபோய்ச் சிமோட்டியிடமளிப்பதாகக் கூறிவிட்டுக் கதவை மூடித் தாளிட்டுக்கொண்டு சென்றான்.

இச்சம்பவம் நடந்த அதேதினம் மாலை ஐந்துமணிக்கு அமராவதி தன் தாயாரோடு கூட ஆற்றோரத்தில் உலவச் சென்றாள். அவள் தற்செயலாய் அன்று கர்னல் குமரவேல் அவளுக்குத் தீங்குசெய்ய முயன்ற பாதைவழியே தன் தாயோடு சென்றாள். கொஞ்சதூரம் சென்றபோது அவளுக்கு அன்று நடந்த சம்பவம் முழுமையும் நினைவிற்கு வந்தது. இருவரும் சம்பாஷித்துக்கொண்டே அன்று அமராவதி கர்னல் குமரவேலைச் சந்தித்த விடத்தருகில் சென்றதே அவள் தன் தாயை நோக்கி, " அம்மா! இந்த விடத்தில்தான் அன்று காப்டன் உலகநாயகர் என்னை அத்துஷ்டக் கர்னலிடமிருந்து காப்பாற்றியது " என்று கூறினாள். அவளுடைய தாயார் போதுமான உலக அனுபவமுடையவ

ளாயின் தன் புத்திரிக்கு உலகநாயகன்மேல் காதலிருக்கிற தென்று தெரிந்துகொண்டிருப்பாள்.

உலகநாயகன் தன் சைனியத்தில் போய்ச் சேர்ந்தபின் ஒரு முறையே கர்னல் இரகுநாதருக்குக் கடிதம் எழுதி னன். அதில் கர்னல் குமரவேல் பிறகு தனக்கு எவ்வித தண்டனேயும் விதிக்கவில்லே யென்று அறிவித்திருந்தான். அமராவதியும் அவள் தாயும் சற்றுதூரம் சென்றபோது, சுகவிலாசத்திலிருந்து காப்டன் உலகநாயகனுடைய அம்மா ளுகிய பஞ்சநாதம் பிரபு எதிரில் குதிரைமேல் வருவதைக் கண்டார்கள். அவர் இவர்களேக் கண்டதும் குதிரையை விட்டிறங்கி அவர்களோடு அன்பாகவும் சலகரணேயாகவும் சம்பாஷிக்கத் தொடங்கினர். அவர்கள் அவருடைய சுபா வத்தைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பதற்கு மாருக அவர் அவர்களிடம் சந்தோஷமாகவும், முகமலர்ச்சியோடும் சம் பாஷித்தார்.

பிரபு "வீணுய்த் தனியே வீட்டில் உட்கார்ந்திருப்ப தைவிட இவ்வளவு சமீபத்தில் நீங்கள் இருக்கிறபோது உங் களேக் காண்பதிலும் உங்களோடு சம்பாஷிப்பதிலுமாக உங் கள் மாளிகையிற் கொஞ்சநேரம் காலத்தைக் கழிக்கலாம் என்று கருதியே புறப்பட்டேன். ஆனல் அதிஷ்ட வச மாக உங்களேப் பாதையிலேயே சந்தித்துவிட்டேன்" என்ருர்.

இவர் மொழிகளேக் கேட்ட அமராவதியின் தாயார் நாம் இனித் தக்க உபசாரம் செய்யாதிருப்பது ஒழுங்கல்ல வென்று கருதி, "பிரபுவே! தாங்கள் நேராய் இரொட்டிக் கிடங்கிற்குச் செல்லுங்கள். நாங்கள் பின்னுலேயே ஒரு நொடியில் இதோ வந்துவிடுகிறேம்" என்ருள். பிரபு "இருக் கட்டும். என்னுல் நீங்கள் உலவ வந்தது கெட்டுப்போக

லாகாது. கூடிய சீக்கிரம் சந்தர்ப்பம் வாய்க்கும்போது கட்டாயம் உங்களிடம் சம்பாஷிக்க வருவேன்" என்று கூறி விட்டு விடைபெற்றுக்கொண்டு சென்றார்.

பிரபு அவர்களோடு பேசிக்கொண்டிருந்தபோது இரண்டொருமுறை தன் அழகைப்பற்றிப் புகழ்ந்து கூறியதை யும் தன்னை ஒருவிதமாக நோக்கியதையும் உணர்ந்த அமராவதிக்கு அவர் விஷயத்தில் வெறுப்புண்டாகியது,

நேயர்களே! மேல்நாட்டில் ஒரு மாது மணம்புரிந்தவளாயினும், இல்லாவிடினும் அன்னிய புருடர் அவளுடைய வனப்பை யவள் முகத்தின் முன்பாகவே புகழ்ந்து கூறுவது சாதாரணம். அதுவும் ஒரு உயர்ந்த நாகரீகமென்பதும், அப்படிச் செய்வதால் நமது மாதரை நாம் கௌரவப்படுத்திப் பூசிக்கிறோம் என்பதும் அவர்கள் கொள்கையாக விருக்கிறது. இவ்வுலகிலுள்ள எல்லா வஸ்துக்களிலும் ஸ்திரீயே உயர்ந்தவளென்பதும், ஆடவனைவிட அவள் உயரமான கௌரவத்திற்கும் மரியாதைக்கும் உரியவளென்பதும், கடவுளுக்கு இரண்டாவதாக அவள் பெண் தெய்வமென்பதுமே அவர்கள் கொள்கை. ஒரே உருவமாகக் கருதப்படும் புருடன் மனைவி இருவரில் மனைவி அவனுடைய உயர்ந்த அரைப்பாகம் என்றும் ஆடவன் தாழ்ந்த அரைப்பாகம் என்பதும் அவர்கள் கொள்கை. அதனால் உன் மனைவி என்பதற்குப் பிரதிமொழியாக உன் உயர்வான அரைப் பாகம் (Your better half) என்பது அவர்களுக்குள் வழங்கி வருகிறது. இம்மதமே புறச்சமயங்களில் ஒன்றாகிய "உலகாயதம்" என்று நம்முன்னோராலும் நமது ஒப்புயர் வற்ற வேதத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

இத்தகைய அபாயகரமான ஆசாரம் நம்மவரிடம் எள்

ளளவுமில்லையாதலால் இதனால் நேரிடக்கூடிய கெடுதிகளைப் பற்றி நாம் விவரிக்கவேண்டிய அவசிய மின்றும்.

அமராவதியின் தாயார், பஞ்சநாதம் பிரபு தன் புத்திரியைப்புகழ்ந்து கூறியதைப் பெரிய கௌரவமாகவே கருதிக் கொண்டாள். அமராவதி அவர் தன்னிடம் நடந்து கொண்ட மாதிரியைப்பற்றி வெறுப்போடு சிந்தித்துக் கொண்டிருக்கையில் அவளுடைய தாயார்,

"குழந்தாய்! பஞ்சநாதம் பிரபு நமது சகவாசத்தில் வரவர அதிகப் பிரியமுள்ளவராகிறார்; சந்தோஷத்தோடும், முகமலர்ச்சியோடும் சம்பாஷிப்பதை நோக்க, அவர் சுபாவகுணத்தைப்பற்றி நாம் கருதியிருந்தது தவறென்று தெரிகின்றது. உன் தந்தை விரோதமான கட்சியைச் சேர்ந்தவரென்று தெரிந்திருந்தும், அவர் இப்போது நடந்து கொள்ளும் மாதிரியை நோக்க அவரிடம் மெச்சத்தக்க பெருந்தன்மையான குணங்கள் இருக்கின்றனவென்றே எனக்குப் புலப்படுகிறது" என்றாள்,

அமராவதி:—"அம்மா, அம்மனிதன் பிரியப்படத்தக்க மனிதன் என்று நான் கருதவில்லை. அவன் காட்டும் மரியாதையும் அவன் சலகரணையாகப் பேசுவதும் யாவும் அவன் வேணுமென்றே செய்யும் அபிநயம் என்பதே எனது அபிப்பிராயம்" என்றாள்.

தாயார்:—அமராவதி! நீ கொள்ளும் அபிப்பிராயம் எனக்கு மிக்க வியப்பையளிக்கிறது. அவர் இரண்டொரு முறை யுன் வனப்பைப்பற்றிப் புகழ்ந்து கூறினதை நான் கவனித்தேன். முகஸ்துதிக்கு மகிழவேண்டும் என்ற அபிப்பிராயம் எனக்கில்லை. ஆனால் உனக்குப் பாட்டனுக்குச் சமானமான அப்பிரபு அவ்வாறு புகழ்

ந்து கூறும்போது அதைத் தக்க துதியாக மதிக்கலா மென்றே கருதுகிறேன்'' என்றாள்.

அமராவதி:—அம்மா! நான் ஒருவருடைய முகஸ்துதியை யும் விரும்பமாட்டேன். அதிலும் பஞ்சநாதம் பிரபு வின் முகஸ்துதி எனக்குச் சற்றும் பிடிக்காது'' என்றாள்.

தாயார்:—அவர் நமது வீட்டிற்கருகிலிருப்பவர். நமக்கு நல்ல சிநேகராகவே யிருப்பாரென்று நம்புகிறேன். அவர் இராஜாங்க விஷயத்தில் உன் தந்தைக்கு எதிர்க் கட்சியைச் சேர்ந்தவராயிருந்தும், அதை மனதிற் கொள்ளாமல் இவ்வளவு சிநேகபாவமாக நடந்து கொள்ளும்போது உன் தந்தையும் அவ்வாறு நடந்து கொள்ளலாமென்பதே அபிப்பிராயம்'' என்றாள்.

இவர்களிருவரும் நெடுந்தூரம் உலவிக்கொண்டே போய்ப் பிறகு வீட்டிற்குத் திரும்பினார்கள். வீட்டருகில் வந்ததும் அமராவதியின் தாய் தலைக்கு ஆயாசமாக விருப்ப தாய்க் கூறிவிட்டுத் தன் அறைக்குச் சென்றாள். பொழுது இன்னும் கொஞ்சமிருந்ததால் அமராவதி வீட்டினருகி லுள்ள வயல்களில் சற்று உலவி வரலாமென்று சென்றாள். சற்று தூரத்தில் இரண்டு மூன்று பேர் புலத்தில் வேலை செய்துகொண் டிருந்தார்கள். அந்த விடத்திற்கும் பாதை க்கும் இடையில் சில மரங்களிருந்ததால் பாதையில் அந்த விடத்தில் செல்வோர் அவர்கள் கண்களுக்குப் புலப்பட மாட்டார்கள்.

அத்தகைய விடத்தில் அமராவதி மெதுவாய்ச்சென்று கொண் டிருக்கையில் ஒரு பக்கமிருந்த சிறு தோட்டத்தின் வழியாக ஒரு வாலிபன் வந்து அமராவதிக்கு வந்தனமளி த்து "அம்மா! தாங்கள் தானே அமராவதியம்மாள்—கர்

னல் இரகுநாதருடைய புதல்வி ?" என்றான். அமராவதி ஆம் என்றதே அவன் "அம்மா ! என் எஜமானராகிய காப்டன் உலகநாயகர் இக்கடிதத்தைத் தங்களிடம் அளிக்கச் சொன்னார்" என்று கூறிக்கொண்டே தன் ஜேபியிலிருந்து ஒரு கடிதத்தை யெடுத்து அவளிடம் அளித்துவிட்டுத் துரிதமாய்த் திரும்பிவிட்டான். அமராவதி அக்கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாள். அதில் கீழ்க்கண்டபடி வரைந்திருந்தது.

"சௌ. அமராவதிக்கு—நீ தயவு செய்து என்னை இரகசியமாகச் சந்திக்க வேண்டும். உன்னிடம் கூற வேண்டிய மிக்க முக்கியமான சமாசாரம் ஒன்றிருக்கிறது. இதற்கு மேல் விவரம் இதில் எழுதலாகாது. உன் தந்தைக்கெழுதிய கடிதத்தில் நான் குறித்திருந்த ஆசாமியால் விபரீதமான ஒரு தீங்குண்டாகி யிருக்கிறது. நான் அங்கு வருவது உன்னையன்றி ஒருவர்க்கும் தெரியலாகாது. இதனால் நான் உங்கள் வீட்டிற்குள் வருவதற்கில்லை. நீ ஒரே நிமிடம் என்னைச் சந்தித்தால் போதும். உன் வீட்டருகிலுள்ள பாலத்தின் கோடியில் இன்றிரவு சரியாக ஒன்பது மணிக்கு நான் காத்துக்கொண் டிருப்பேன்.

இப்படிக்கு,

காப்டன் உலகநாயகன்."

இக்கடிதம் உலகநாயகனே யெழுதிய தென்பதில் அவள் சற்றும் சந்தேகங் கொள்ளவே யில்லை. மேலும் உலகநாயகன் அவள் தந்தைக்கெழுதிய கடிதத்தை யவள் பார்த்திருக்கிறாள். இதிலுள்ள எழுத்து கையொப்பம் யாவும் அவ்வாறே யிருக்கின்றன. இதன்றி தன் தந்தைக்கெழுதிய கடிதத்தில் கர்னல் குமரவேல் தனக்கு வேறு எவ்வித

தண்டனையு மளிக்கவில்லையென்று அவன் எழுதியிருந்ததை யிதில் குறிப்பிட்டிருக்கிறான்.

அமராவதியிடம் சீட்டைக் கொடுத்துவிட்டுத் திரும்பிய வாலிபன் பாலத்தைக் கடந்து அங்கிருந்த அடர்ந்த விருக்ஷங்களுக் கிடையில் நுழைந்து சுமார் கால் மைல் தூரம் சென்று அங்கு மரத்தடியில் உட்கார்ந்து சாராயம் அருந்திக்கொண்டிருந்த இரண்டு முரட்டு ஆட்களருகில் நின்றான். அவர்களில் உயரமானவன் வாலிபனைக் கண்டதும், "ஆ! அப்பாசாமி! என்ன இவ்வளவு துரிதமாகத் திரும்பிவிட்டாய். சென்ற காரியம்...?" என்றான். கர்னல் குமரவேலின் ஆளாகிய அப்பாசாமியே அமராவதியிடம் கடிதம் கொண்டுபோய்க் கொடுத்தவன். அப்பாசாமி அம் முரடரை நோக்கி "என் பங்கு வேலை முடிந்துவிட்டது. அக்கன்னிகை தனியாகவே உலவிக்கொண் டிருந்தாள். கடிதம் அவள் ஜேபியில் சேர்ந்து விட்டது. கட்டாயம் குறித்த வேளைக்கு வந்துவிடுவாள். இனி யுங்கள் வேலைதானிருக்கிறது" என்றான்.

முன் பேசிய முரடன் "அதைப்பற்றி நீ சற்றும் கவலை கொள்ளவேண்டாம். இரவு பனிரண்டு மணிக்குள் உனது கர்னல் அவளுக்காக ஆயத்தம் செய்திருக்கும் கிராமத்திலுள்ள வீட்டிற்கு அவளைக் கொண்டுவந்து சேர்த்து விடுவோம்" என்றான். அவர்களிருந்த விடத்திற்கருகில் இரண்டு பெரிய பலம் பொருந்திய குதிரையும், ஒரு அழகிய குட்டைக் குதிரையும் பசும்புல்லை மேய்ந்துகொண்டிருந்தன. அப்பாசாமி அக்குட்டைக் குதிரைமேலேறிக் கொண்டு, அவர்களைச் சாக்கிரதையா யிருக்கும்படி எச்சரிக்கை செய்துவிட்டு, நகரை நோக்கிச் சென்றான்.

அமராவதி வீட்டிற்குத் திரும்பிச்சென்று தன் அறை

யில் உட்கார்ந்து நெடுநேரம் அக்கடிதத்தைப்பற்றிச் சிந்தித்தாள். தன் பெற்றோர்க்குத் தெரியாமல் இரகசியமாக ஒரு காரியத்தையும் அவள் செய்வதில்லை. இப்போது இதை யவர்களுக்குக் கூறலாமென்றால் உலகநாயகன் தான் அங்கு வருவது ஒருவருக்கும் தெரியலாகாதாதலால் இரகசியமாகவே சந்திக்க வேண்டும் என்று எழுதியிருக்கிறான். போகாமல் இருந்துவிடலாமெனில் செய்நன்றி மறப்பதாகும். எப்படி யெனில் தனக்கு உதவி செய்ததனாலேயே அவன் தன் விடுமுறையை யிழந்து பட்டாளத்தை விட்டு வெளிச் செல்லலாகாதென்று தடுக்கப்பட் டிருக்கிறான். இப்போது அதே காரணத்தால் ஏதோ பெரிய இக்கட்டில் சிக்கி யிருக்கிறானென்று தெரிகிறது. இதனால் அவள் மனதிற்கு மிக்க வியாகூலம் உண்டாகியது. அதோடு அந்தரங்கத்தில் அவன்மேலிருக்கும் காதல் ஒருபுறம் அவனைக் காண வேண்டுமென்று தூண்டுகிறது. ஆகையால் கடைசியில் அவன் கோரியபடியே அவனைச் சந்திப்பதென்றும் பிறகு ஆலசியமின்றித் தாய் தந்தையருக்கு நடந்த சங்கதியைக் கூறுவதென்றும் தீர்மானித்துக் கொண்டாள்.

இரவு மணி ஒன்பதடிக்கும் சமயமாயிற்று. அப்போது அமராவதி ஒரு போர்வை யணிந்து கொண்டு வீட்டிலிருந்து புறப்பட்டுப் பாலத்தை நோக்கிச் சென்றாள்.

இரொட்டிக் கிடங்கினருகில் வெள்ளையாற்றின்மேலிருக்கும் பாலம் உயரத்திலிருக்கிறது. இரொட்டிக் கிடங்கிலிருந்து செல்கிறவர்கள் சரிவான மேட்டின்மேலேறிப் பாலத்தின் உச்சியிற் சென்றபின், மறுபக்கமுள்ள பெரிய பள்ளத்தில் இறங்க வேண்டும். அந்தப் பக்கம் அடர்ந்த விருக்ஷங்களு மிருக்கின்றன. அதனால் பாலத்தினருகில் இந்தப் புறம் இருக்கும் இராஜ மாளிகையென்ற ஹோட்டலிலிருப்

பவர்களுக்கு அந்த இடம் புலப்படாது. அமராவதி பாலத்தைக் கடந்து மறுபக்கம் இறங்கிச் சரிவின் அடியிற் சென்றபோது மரத்தடியில் மறைந்திருந்த இருவர் திடீலென்று ஏககாலத்தில் அவள்மேற் பாய்ந்து அவளைப் பிடித்துக் கொண்டார்கள். அவள் கூச்சலிடத் தொடங்கும் போது அவள் வாயில் துணி சொருகப்பட்டது. ஆனால் அதே சமயம் சற்று எட்டவிருந்த ஒரு புதரில் மறைந்திருந்த காப்டன் உலக நாயகன் தன் உடைவாளைக் கரத்திற் பிடித்தபடி ஒரு பாய்ச்சலில் பாய்ந்து வந்து முரடர்களில் ஒருவன் சிரசின்மேல் தன் கத்தியின் கைப்பிடியால் ஓங்கியடித்ததே அவன் அடியற்ற மரம்போல் தரையில் சாய்ந்துவிட்டான்.

அதைக்கண்ட மற்றவன் எத்தனை பேர் வந்திருக்கிறார்களோ வென்று பயந்து அமராவதியை விட்டுவிட்டு ஐந்தாறடி போடியவன், வந்தவன் ஒருவனே யென்றறிந்து தன் வாளை யுருவிக்கொண்டு உலக நாயகன் மேல் பாய்ந்தான். இதற்கிடையில் உலக நாயகன் அக்கன்னிகையின் வாயிலிருந்த துணியை யெடுத்துவிட்டுப் பயப்படவேண்டாம் என்றுகூறி அம்முரடன் ஓங்கிய கத்தியைத் தன் வாளால் தடுத்துவிட்டு மறுவினடி அவன் கத்தியை ஆகாயத்தில் பறக்கும்படித் தட்டிவிட்டு, அவனைக் கீழே வீழ்த்தி அவன் மார்பின்மேல் ஒரு காலை யூன்றிக்கொண்டு கத்தி முனையை அவன் நெஞ்சுக் குழியில் வைத்து "இவ்வாறு செய்யும்படி யார் உங்களை யனுப்பியது? உண்மையைக் கூறினால் உன் பிராணன் தப்பும். இன்றேல் மறுநிமிடம் நீ சவமாவது நிச்சயம்" என்றான். அம்முரடன் நடுநடுங்கி "அய்யோ! என்னைக் கொல்லவேண்டாம். நான் உண்மையைக் கூறிவிடுகிறேன். எட்டிக் குடியிலிருக்கும்

பட்டாளத்தின் கர்னலாகிய குமரவேல்தான் எங்களை யனுப்பியவன்" என்றான்.

உலக நாயகன் அவனை எழுந்திருக்க விட்டு "கோழைப் பயலே! போய் உன் கூட்டாளியாகிய துஷ்டனை யழைத்துக் கொண்டு உங்களை யனுப்பியவனிடம் சென்று "தற்செயலாகக் காப்டன் உலகநாயகன் அங்கு வந்ததால் நாங்கள் உதை பட்டுக்கொண்டு வந்தோம் என்று கூறுங்கள்" என்று இயம்பிவிட்டு அமராவதியை யழைத்துக்கொண்டு பாலத்தைக் கடந்துசென்று அவளுக்குத் தேறுதல் கூறினான்.

நேயர்களே! இத்தகைய சந்தர்ப்பத்தில் அவர்கள் இருவர் மனதிலுமிருந்த பரஸ்பரக்காதல் வெளியாகாமலிருக்குமென்று யார்தான் நம்பலாகும்? ஆயினும், கற்பிலக்ஷணம் அமைந்த எந்தக் கன்னிகையும், தனக்கு ஒருவன் மேல் எத்தகைய அடங்காக் காதலிருந்தாலும், அதை வலிய ஒருபோதும் வெளியிடவே மாட்டாள். அவ்வாறே இச்சந்தர்ப்பத்திலும் நமது உலகநாயகனே முதலில் தன் காதலை வெளியிட்டான். அதைக் கேட்டபோது அமராவதிக்குண்டான நாணம் முதலிய குறிகளால் அவளுக்கும் தன் மேல் காதல் இருப்பதா யறிந்துகொண்டானே யன்றி, அப்போதும் அவள் தன் பிரியத்தைப் பகிரங்கமாக வெளியிட்டவளில்லை. ஆனால் அவனை நோக்கி "தாங்கள் அவசியம் என் தாய் தந்தையரிடம் வந்து நேரில் யாவும் கூற வேண்டும்" என்றாள்.

இருவரும் நேராய் இரொட்டிக்கிடங்கை நோக்கிச் செல்லும்போது குதிரைகளின் காலடிச் சத்தத்தால் அத்துஷ்டர்கள் நகரை நோக்கிச் செல்கிறார்களென்று அறிந்தார்கள். அவர்கள் மாளிகைக்குள் செல்லும்போது கர்னல்

இரகுநாதரும் அவர் பத்தினியும் போசனம் செய்தபின் சம்பாஷித்துக்கொண் டிருக்கும்போது வழக்கம்போல் தங்கள் புத்திரியும் அங்கு வராததைப்பற்றி ஆச்சரியப்பட் டுக்கொண் டிருந்தார்கள். ஆகையால் திடீலென்று தங்கள் புத்திரி காப்டன் உலகநாயகனோடு கூட வருவதைக் கண்டு மிக்க வியப்படைந்தார்களென்று நாம் கூறவேண்டுவதில்லை.

இருவரும் அறைக்குள் சென்றதும் அமராவதி "அம்மா! அப்பா! இன்று நான் உங்களுக்குத் தெரியாமல் ஒரு காரியம் செய்துவிட்டுப் பெரிய ஆபத்தில் சிக்கிக்கொள்ள விருந்தேன்.'' என்றாள். இதைக் கேட்டதே அவர்க ளிருவரும் மிக்க கலக்கமும் ஆவலு மடைந்தார்கள். உலகநாயகன் முன்னே அவர்கள் கலக்கம் தணிய இரண் டொரு வார்த்தைகளால் விஷயத்தைக் கூறிவிட்டுப் பிறகு விவரமாக இயம்ப முயன்றான்.

அதற்குள் அமராவதி உலகநாயகன் அனுப்பியதாகத் தனக்கு வந்த கடிதத்தைத் தன் தந்தையிட மளித்தாள். கர்னல் இரகுநாதர் அதைப் பார்த்ததும் முதலில் ஒரு நிமிடம் சந்தேக மடைந்தார். அதற்குள் காப்டன் உலக நாயகன் "கர்னல் அவர்களே! கடவுளறியக் கூறுகிறேன். இக்கடிதம் கள்ளக்கடிதம். கர்னல் குமரவேல் என் கையெழுத்தைப் பன்முறை பார்த்திருக்கிறான். என் கடிதங் கள் பல அவனிடமிருக்கும். ஆகையால் என் கையெழுத் தைப்போல் ஏறக்குறைய எழுதுவதும் என் கையொப்பம் போல் கையொப்ப மிடுவதும் அவனுக்குக் கஷ்டமல்ல." என்றான்.

கர்னல் இரகுநாதர்.—"பெருந்தன்மையுடைய வாலிபரே! நான் முதலில் சற்று சந்தேகங் கொண்டதற்காக என்னை மன்னிக்கவேண்டும். நீர் ஒருமுறையல்ல இரு

முறை யென் புத்திரிக்குச் செய்த பேருதவிக்காக நான் மிக்க நன்றி பாராட்டுகிறேன்.'' என்றார்.

உலகநாயகன்.—கர்னல் அந்த கர்னல் குமரவேல் தான் செய்யப்போகிற இந்த அக்கிரமச் செயலைப்பற்றி எனக்கு அறிமுகமான ஒருவரிடம் பெருமையாகக் கூறினான். அவர் மிக்க பெருந்தன்மையான குண முடையவர். அவர் இந்த அக்கிரமச் செயலைத் தடுக்கத் தீர்மானித்து எனக்கு இதை யறிவித்தார். ஆனால் அவர் சில காரணங்களுக்காக அத்தகைய கூட்டத்தில் சில நாட்கள் நடமாடவேண்டி யிருக்கிறது. ஆகையால் அவர் இதை வெளியிட்டதாகக் கர்னல் அறிந்தால், அவன், சிநேகன் நம்பிக்கையாகக் கூறிய இரகசியத்தை வெளியிட்ட துரோகி என்று அவரைப் பழிப்பான். அந்த அயோக்கியர் கூட்டத்தில் அவர் செய்கை துரோகமாக இகழப்படுமே யன்றி இவன் அக்கிரமச் செயல் கண்டிக்கப்படுவதற்குப் பதிலாகப் புகழப்படும். ஆகையால் நான் தற்செயலாக அங்கு வந்ததாகவே புலப்படவேண்டும் என்று அவர் கூறிய நிபந்தனைகளின்படி நான் நடக்க வேண்டியதாக விருந்தது. ஆகையால் நான் அப்படியே நடந்துகொண்டேன். ஆயினும் அவனைத் தண்டிக்கவேண்டியது அவசியம்'' என்றான்.

கர்னல்.—"நாம் அவன்மேல் பிராது செய்தால் சின்ன இராஜாங்கத்தார் கட்சியில் அவன் சேர்ந்தவனாதலால் நமது பிராது சற்றும் பயன் பெறாது. ஆகையால் அவன் தோல்வியடைந்த அவமானமே அவனுக்குப் போதுமானது'' என்றார்.

காப்டன் உலகநாயகன் இதுதான் சமயமென்று கருதி

"நான் இச்சமயத்தில் தங்களுக்கு என் மனதின் அந்தரங் கத்தை வெளியிடக் கருதுகிறேன். அதாவது நான் தங்கள் புத்திரியின் மேல் ஆதியிலிருந்தே பூரணமும் சத்தியமுமான காதல் கொண்டிருக்கிறேன். தங்கள் அபிப் பிராயம் அதற்கு மாருக இராதென்று நம்புகிறேன்" என்ருன்.

கர்னல் அவன் மொழிகளைக்கேட்டு மிக்க வியப் படைந்தார். ஆயினும் அவனை நோக்கி, "காப்டன்! நீர் செய்திருக்கும் உதவிகளுக்கு நான் என்றும் உமக்கு நன்மை செய்யக் கடமைப்பட்டவனுக இருக்கிறேன். உம்முடைய குணங்களோ மிக்க பெருந்தன்மையான வைகள். உம் சுத்த வீரத்தன்மை மேலானது. நீர் சிறிய கட்சி அரசனிடம் ஊழியம் செய்வதா யிருந்தாலும் உமது குணங்கள் மேலானவைகளே யென்று நான் நன்கறிவேன்" என்று கூறிக்கொண்டே தன் புத்திரியின் முகத்தை நோக்கினுர். அவள் முகக்குறியால் அவள் உலகநாயகன்மேல் காதல்கொண் டிருக்கிருளென் றறிந்து "ஆ! தெரிந்துகொண்டேன். உங்கள் இருவர்க்கும் பரஸ் பரக்காதல் இருப்பதாகத்தெரிகிறது. இனி நான் உங்கள் விருப்பத்திற்கு மாருகக் கூற வழியில்லை. ஆயினும் உலக நாயகம்! உமது அம்மான் இதற்குச் சம்மதிப்பாரா என்று நான் அஞ்சுகிறேன்" என்ருர்.

உலகநாயகன்:—என் அம்மான் தங்களைப்போலவே உதார குணமுள்ளவராக இருப்பாரேயன்றி என் சந்தோஷ வாழ்க்கைக்கு விரோதமாக நடக்கமாட்டார்" என் ருன்.

அதன்மேல் அமராவதியின் தாயும் தந்தையும் மனச் சந்தோஷத்தோடு தம் புதல்வியை உலகநாயகனுக்களிக்கச்

சம்மதித்தார்கள். அச்சமயம் காதலர் இருவர்க்கும் உண்டான சந்தோஷம் இத்தகையதென யாரால் கூறமுடியும்.

17-வது அத்தியாயம்.

சிறைச்சாலையில் ஜனால் உக்கிரசேனன் மதனும்பாலேக் காணல்—பூர்வ இரகசியங்கள்— நெஞ்சு திடுக்கிடும் சம்பவங்கள்—கற்பிழந்தவளிடம் நன்றியாவது விசுவாசமாவது இராது—முடிவான ஒப்பந்தம்.

நேயர்களே! நாம் இப்போது நகரக்கோட்டைச் சிறைச்சாலையில் ஜெனரல் உக்கிரசேனன் இருக்கும் அறையில் என்ன நடக்கிறதென்று கவனிப்போம்.

அமராவதி இரவு ஒன்பது மணிக்கு இரண்டு துஷ்டர்களிடம் சிக்கிக்கொண்டாள் என்று கூறினேமல்லவா? அதே வேளையில் ஜனரல் உக்கிரசேனன் தன் அறையில் உட்கார்ந்துகொண்டு யார் வரவிற்காகவோ எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறன். அவன் முகத்தில் பயமாவது கலக்கமாவது மனச்சோர்வாவது சற்றேனும் தோன்றவில்லே. ஆனல் அவனுடைய தைரியம் அறிவற்ற மானஈனம் உறைக்காத முரடர்களின் முரட்டுத்தனமான அலட்சியத் தைரியமல்ல. புத்தி சூக்குமமும், முன் யோசனையும், மிக்க சாமர்த்தியமும், சூது வாது, அசத்தியம் முதலிய குணங்களில்லாப் பெருந்தகைமையும், சத்தியமும், நீதியும்வாய்ந்த சுத்த வீரத்தன்மையுடையவனும், பன்முறை பெரிய ஆபத்துக்களில் சிக்கித் தன் சாமர்த்தியத்தால் தப்பித்துக்கொண்ட அனுபவமுடையவனும், மரணத்தைப் பன்முறை சமீபத்

தில் கண்டவனுமாகிய ஒரு பிரதாப வீரன்போல் அவன் மனதில் எள்ளளவு கலக்கமாவது பீதியாவதின்றிச் சர்வ சாந்தமுடையவனாகத் தோன்றினான். தான் எதிர்பார்க்கும் ஆசாமி வரலாகுமோ இல்லையோ என்பதிலும் அவன் அய்யமுடையவனாகத் தோன்றவில்லை.

மணி ஒன்பதடித்தது. அப்போது முன் அறையின் கதவு திறக்கப்பட்டது. மறுவினாடி தன் அறையின் பூட்டு திறக்கப்பட்டுப் பிறகு கதவு திறக்கப்பட்டதும், முன்னே முகமூடியும் நீண்ட அங்கியும் அணிந்த ஒரு மாதும் பின்னால் காவலனாகிய கிரிநாதனும் அறைக்குள் வந்தார்கள். அவர்களைக் கண்டதும் ஜனரல் உக்கிரசேனன் "கிரிநாதம்! இம்மாதை இங்கு விட்டுவிட்டு நீ கதவை மூடிக்கொண்டு செல். ஆனால் வெளியறையின் வாயிற்படி யருகில் நின்று கொண்டிரு. ஏனெனில் நான் சமிக்கை செய்தவுடனே இவர்களை நீ வெளியில் அழைத்துச்செல்லல் வேண்டும்" என்றான். கிரிநாதன் அவ்வாறே சென்றனன்.

கிரிநாதன் கதவை மூடிக்கொண்டு சென்றதே, ஜனரல் உக்கிரசேனன் அம்மாதை நோக்கி "சீமாட்டியே! இந்த இடத்தில் நான் அளிக்கத்தக்கது இங்கிருக்கும் ஒரே மரப் பலகையான ஆசனமே. இதில் தயவுசெய்து வீற்றிரும். நான் நின்றுகொண்டிருக்கிறேன்" என்றான். மதனம்பாள் சீமாட்டி நிதானமாக உட்கார்ந்தாள். அவள் ஜனரல் உக்கிரசேனன் யாரென்று தெரியாமலோ, அல்லது தான் கருதிய மனிதன்தானோ வென்ற சந்தேகத்தாலோ அவனை ஏற இறங்க உற்று நோக்கத் தொடங்கினாள்.

ஜனரல் உக்கிரசேனன் அவள் அருகில் நின்று சுவரின் மேல் சாய்ந்துகொண்டு கரங்களை மார்பின்மேற் கட்டிக் கொண்டு மதனம்பாள் சீமாட்டியை யுற்று நோக்கி,

"கோகிலம் அவள் (பூர்வ நாமம்)! நான் எங்கிருக்கிறேன் தெரிகிறதல்லவா? சிறைச்சாலையிலிருக்கிறேன். என் கைகால்களில் விலங்குகள் பூட்டப்பட்டிருக்கின்றன. இன்னொரு சங்கதியும் அறிந்துகொள். அதாவது நான் இன்று மூன்றாவது நாள் சிரச்சேதம் செய்யப்பட வேண்டுமென்று இன்று மாலை அரசன் கட்டளை பிறந்து சிறைச்சாலை யதிகாரியிடம் வந்து சேர்ந்திருக்கிறது. இப்போது நீ தான் இவையனைத்தையும் தும்சம் செய்யவேண்டும். என் விலங்குகள் கழற்றப்படவேண்டும், அரசன் கட்டளையும் இரத்து செய்யப்படவேண்டும். நான் பூரண மன்னுப்போடு விடுதலை பெற்று எப்படியாவது நாளை யிரவு உன் மாளிகையில் நடக்கவிருக்கும் நடன விருந்திற்கு வந்து நானும் நடனம் செய்யவேண்டும்" என்று தன் கட்டளை கட்டாயம் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை யுடையவன்போல் கூறினான்.

சீமாட்டி :—"ஜனரல் உக்கிரசேனர் என்ன காரணத்தால் இவ்வளவு தைரியத்தோடு இத்தகைய கட்டளைகளை யிடுவது?" என்றாள்.

ஜனரல் :—"கோகிலம்! நீ இப்படிக் கேட்பதாயின் நான் பூர்வ சரித்திரத்தைப்பற்றிக் கூறவேண்டியதாக நேரிடும். அவற்றைக் கேட்பதால் உன் மனதிற்கு வேதனை யுண்டாகும்" என்றார்.

சீமாட்டி :—"நீர் காப்டன் உத்தண்டி என்ற பெயரோடு இவ்வூருக்கு வந்து சேர்ந்தீர். இப்போது உம்முடைய பெயர் ஜனரல் உக்கிரசேனர் என்று தெரியவந்தது. பெரும்பாலும் இரண்டு பெயர்களும் பொய்ப்பெயர்களென்று இவற்றிற்கு முன் வேறொரு பெயர் இருந்திருக்கும் என்று நினைக்கிறேன்" என்றாள்.

இம்மொழிகளைக் கேட்ட ஜனரல் உக்கிரசேனனுக்கு மிக்க வியப்பும், சந்தேகமும் உண்டாயின. அவன் வெறுப்போடும் சந்தேகத்தோடும் "கோகிலம்! மெய்யாகவே நான் யாரென்கிற உண்மை உன் உள்ளத்தில் புலப்படவில்லையா? என் உருவம் அவ்வளவு மாறுதலடைந்துவிட்டதா? காலத்தால் சில மாறுதல் இயற்கையாகவே உண்டாயிருப்பினும என் உருவமே நீ அறிந்துகொள்ளக் கூடாத அவ்வளவு மாறுதலடைந்திருக்கிறதா? நான் மாந்திரீகன் வேடமணிந்து உன் மாளிகைக்கு அன்றிரவு வந்திருந்தபோது உன் செவியிற் கூறிய இரண்டொரு வார்த்தைகளால் நான் யார் என்று உனக்கு விளங்கவில்லையா? யார் அத்தகைய வார்த்தைகளை உன் செவியிற் கூறுவார்களென்பது உனக்குப் புலப்படவில்லையா? நான் யாரென்ற உண்மை உனக்கு விளங்க வில்லையாயின் இன்று நான் அனுப்பிய சீட்டின்படி ஏன் நீ இங்கு வந்தாய்" என்றான்.

186496

சீமாட்டி இன்னும் மறுமொழி கூறாமல் தன் முகமூடியின் மூலமாக அவனையுற்று நோக்கிக்கொண்டேயிருந்தாள். ஆதிகாலத்தில் நேர்ந்த சம்பவங்கள் அவள் மனதில் கலக்கத்தை யுண்டாக்கி அவளைப் பேசவொட்டாமற் செய்ததாலோ, அவன் கூறுவதையெல்லாம் கேட்டுப் பிறகு அவனுக்கு என்ன விடையளிக்கலாமென்பதைப்பற்றிச் சிந்திக்கக் கருதியோ மௌனமாகவே யிருந்தாள்.

ஜனரல்:—"கோகிலம்! இன்னும் நீ மௌனம் சாதிக்கிறாய். உன் மௌனத்தை எப்படி யுடைப்பதென்று எனக்கு விளங்கவில்லை. அனேக வருடங்களுக்கு முன் நீ என்னைக் கண்டபோது நான் வாலிபனாகவிருந்தேன். அப்போது எனக்குச் சரியாக மீசைகூட முளைத்திருக்கவில்லை. இப்போதோ பலம்பொருந்திய